ஞானோதயம்.

V.7. No. 37. 20.9.1934.

[illegible]
[illegible] 34-7-37
199187

ANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஞு செப்டம்பர் மீ 20உ [No. 37

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)	577
2.	தமிழ்ப் பாடம்— நைடதம்—நளன்தூதுச் சருக்கம்.	579
3.	கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L.	581
4.	நாமகள் ஆசிரிய விருத்தம் நவாலி க. சோமசுந்தரம் பிள்ளை.	584
4.	நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 10-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L.	585
6.	இரவீந்திரநாதர் கட்டுரைகள் (தபோவனம்) W. E. அரியநாயகம் B.A., B.D., B. Ed, & ஆஷாதேவி M. A.	586
7.	அப்பர் (64-கலை இதுகாசம்-இராமன் சரிதை) E. N. தணிகாசல முதலியார் B. A. B. L.	589
8.	வர்த்தமானம்	592

கலாநிலயம்

தாய்மொழியிற் றழைத்த வுள்ளம்

இன்று இவ்வுலகத்தில் "ஒருவர்" என்று உரைக்கப் பெறுகின்ற பெரியவர் கவிவரர் இரவீந்திரநாதர் வருகையால் சாலப் புனிதமடைந்திருக்கின்றது இச் சென்னைமாநகரம். இப்புலவர்பெருமானைத் தனியே சந்தித்துச் சிறுநேரம் உரையாடும் ஒரு பெரும் பாக்கியத்தை இவர் தம் அருளினாற் பெற்றேன். கலைநலங் கனிந்த உணர்வினது தூய்மையையும் மேன்மையையும் பன்முறை பேசியுளது இக் கலாநிலயம். அவ்வுணர்வுதானே யோர் உருவம்பெற்று வீற்றிருந்தால் என்ன வீற்றிருந்தார். அன்னவர்முன் சென்று வணங்கிய என்னைப் பேரருளின் ஒளிபரந்த தம் இருகண்களால் வரவுகூறியபின்னர், நம் கலாநிலயம் செய்யுங் கருமமும் செயல் வகையையும், இக்கருத்துக்களும் நம் நோக்கங்களும் விரைந்தெங்கும் பெருகுமாறு சென்னைநகரிலும் காஞ்சிபுரத்திலும் செட்டிநாட்டிலும் நடைபெறுகின்ற நம் கலாநிலயத் தமிழ்வகுப்புக்களைப்பற்றியும் இயம்பி, தமிழ்மொழியின் வழியாக எந்நிலையினோர்க்கும் எங்கும் கல்சர் எளிதிற் கைவருமாறுமுயல்கின்ற முயற்சியொன்றையே மேற்கொண்டிருக்கின்றது இக்கலாநிலயம் என்று நான் முடிக்குமளவில், அவர், "கைப் பொறுப்பில்லாமல் தன்னுடைய வருவாயைக் கொண்டே தான் நடக்கக் கூடிய நிலையில் இருக்கின்றதோ இத்தமிழ்ப்பத்திரிகை" என வினவினார். அதற்கு நான், "இல்லை, நஷ்டமே இதுகாறும் அடைந்துவருகின்றோம்" என்று மறுமொழி கூறியபோது, "இதனைத் தெரிந்துதான் கேட்டேன்" என்னுங் குறிப்புத் தோன்ற இளநகையரும்பி, "உயிர் வாழ்க்கைக்கு உண்மையாய பயனளிக்கும் காவியங்களினிடத்தும் கலைகளினிடத்தும் தம் கருத்தை நம் மக்கள் செலுத்துவதென்பதுதான் மிகவும் அரியதாகிவிட்டதே. ஆழ்ந்து ஒன்றையும் அறிய விரும்புவாருமில்லை, முயன்று ஒன்றையும் செய்ய விரும்புவாருமில்லை; இந்த அரசியல் நடமாட்டங்களும் எதிர்வாதங்களுமே எல்லோரையும் அளவுகடந்து கதுவிக்கொள்ள, உண்மையாக உணரவேண்டியனவும்செய்யவேண்டியனவும் தலையெடுக்கமாட்டாமல் வீண் போகின்றனவே" என்று கூறி இரங்கினார். "நல்லனவற்றைக் கைவிட்டு, இவ் வரசியல்வாதங்களில் ஆர்வமுடையராய், விவகரிப்பதற்குக் காரணம் யாவதாயிருத்தல் கூடும்" என்று நான் கேட்டதற்கு நம் கவிவரர் கூறிய பொருளுரைகள் போற்றத்தக்கன. "அரசியல் வாதங்களில் கலந்துகொள்கின்றவர், முன்னே ஒன்றும் அறிந்திருக்கவேண்டும் என்னும் அவசியமுமில்லை, பின்னே ஒன்று முயன்று செய்யவேண்டும் என்னும் அவசியமுமில்லை. அவ்வப்பொழுது தோன்றுவதைச் சொல்லிக்கொண்டும் நினைத்ததைச் செய்துகொண்டும் திரிந்திருந்தால் போதும். கலைப்பயிற்சியிலும் கலையுணர்வு கைவரும் முயற்சியிலும் இப்படி மேலெழுந்தவாரியாய்க் கழிந்துவிடல் இயலாது. இவைகளுக்கு ஆழ்ந்தநோக்கமும் ஊன்றிய உழைப்பும் அதிகம்வேண்டும். ஆதலாற்றான் ஜனங்கள் இவைகளை மேற்கொள்ள அஞ்சி அஞ்சி அப்பழக்கத்தையே இழந்துவிடுகின்றவராகின்றனர். இதனைவிட்டு அரசியல்வாதங்களில் கலந்துகொள்வது சுலபமாக இருத்தலால் அதனைத்தொடர்கின்றனர். இச் சென்னை ராஜதானி அளவுகடந்து தன்கவனத்தை அரசியற்செய்திகளிற்

செலுத்துகின்றது. இது நன்று அன்று" என்று நம் புலவர்பெருமான்புகன்றமொழிகளை நம்கலாநிலயவாசகர்கள் கருத்துட்கொள்ளும்படி வேண்டுகின்றேன். இந்தக்குறை இச்சென்னைமாகாணத்திற்கு மாத்திரந்தான் உரியதோ அல்லது ஏனையமாகாணங்களுக்கும் பொருந்துமோ என்று நான் வினவாமல் இருக்கவில்லை. ஆயினும் அவர், "மற்றைய மாகாணங்களுக்கு அவ்வவைகளுக்குரிய குறைகள் இருக்கின்றன" என்றளவே கூறினர்.

ஆயினும், இச் சென்னைமாகாணத்திற்குமட்டுமே பொருந்தக்கூடிய வகையென அவர் நாம் எடுத்துக்காட்டியது வேறொன்றுளது. "தாய்மொழியையும், அதனிலுள்ள இலக்கியங்களையும் மதியாமல் ஆங்கிலத்திற்கே தம்மை முற்றிலும் அடிமைகளாகத் தந்துகொண்டுவிட்டவர்கள் இம்மாகாணத்தில் இருக்குமளவு வேறிடங்களில் இல்லை" என்று சாற்றினர் அவர். தாய்ப்பாஷையில் மனம் செல்லாதவர், வேறு எது பெறினும், தம்மையே அடியுடன் இழந்துவிடுகின்றார் என்னக் கவிவரர் உரைக்கும்போது, அவ்வுரை ஆன்ம வளர்ச்சியின் இரகசியத்தை எடுத்தளிக்கின்ற உண்மைமொழிகளாகுமேயன்றி, கருத்தற்றவொரு அபிமானத்தால் வந்த வார்த்தைகள் ஆகா. இதனால் அவர் ஆங்கிலத்தை இகழ்கின்றனர் என்று கொள்ளவேண்டா. இப்பெரியோர் எந்த மொழியையும் இகழ்கின்றகுணமுடையவர் அல்லர். யாராயிருப்பினும் அவரவர் தாய்மொழியே அவரவர்களுடைய வளர்ச்சிக்கு ஆதாரமாக இருக்கவேண்டுமென்பது அவர் கருத்து. ஏனெனில், தாய்மொழியொன்றே இயற்கை, மற்றைய மொழிகள் செயற்கையாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டவை. எனின், மனிதனது இயற்கையான வளர்ச்சி செயற்கையானதொன்றால் எங்ஙனம் இயலும் என்ற ஒருகேள்விக்கு எதிருரைத்தல் அருமை. ஆதலின், "ஆங்கிலம் முதலிய பிறமொழிகளெத்தனைதான் கற்றுத்தேர்ந்தாலும், அவரவர் தாய்மொழியில் உள்ள இலக்கியங்களைக் கற்றுத்தேராத வரையில் முழு மனிதர் ஆகமாட்டார்" என்று அறிவிற்சிறந்த அப்பெரியோர் இயம்பிய மொழிகளை இக்கலாநிலயம் வணக்கமுடன் பின்பற்றி வந்திருப்பதை நம் நண்பர்கள் பாராட்டுவார் என மதிக்கின்றேன்.

உள்ளமுமுணர்வும் தாய்மொழி இலக்கியங்களைக் கொண்டாடித் தழைக்கவேண்டும் என்று கூறிய அக்கொள்கைக்குச் சான்றாகஅவர் தம் அநுபவத்தையும் எடுத்துக்காட்டினர். "எத்தனை அழகும் எத்தனை உயரிய கருத்துக்களும் பிறமொழிகளில் இருந்தாலும் அவைநாம் மீண்டும் நம் தாய்மொழியின் வழியாக உள்ளத்தில் இறங்கினால்தான் நமது உணர்வினைத் தீண்ட இயலும். அவ்வாறின்றி அவை ஆங்கிலமொழியாகவே இருக்குமாயின் நம் அறிவின் அளவோடு நின்று ஓர் அலங்காரமாவதன்றி அவைகளால் நாம் வேறுபயன் பெறுதற்கில்லை. அயல்மொழிநூல்களில் அடங்கிய கருத்துக்களுமழகும், நம்முடைய தாய்மொழியில் மறுபிறவி ஒன்று எடுத்தபின்னர்தான் அவை நம்முடைய ஆன்மாவிற்கு உணவாகக்கூடும். அயல் பாஷையில் இருக்கும் வரையில் ஜீரணம் ஆகி நம்முடன் கலப்பது அரிது" எனக் கூறிப் பின்னர், "நான் சிலபோது என் நண்பர்களுக்கு ராபர்ட் ப்ரௌனிங் (Robert Browning) அனைய உயரிய ஆங்கிலக் கவிகளைப் படித்துக்காட்டுவதுண்டு; இந்நண்பர்களாங்கில மொழியை நன்றாகக் கற்றுத் தேர்ந்தவர்கள். இக்கவிகளைத்தாமே படித்து உணர்ந்துவர்க்கும் போதிக்கவல்லவர்; இவர்களுக்கு நான் கவிகளைப் படித்துக்காட்டிக்கொண்டு வரும்போதே இடையிடையே உயரிய கருத்துக்களை உட்கொண்டிருக்கின்ற சில வாக்கியங்களை அவ்வப்போது வங்காளத்தில் மொழிபெயர்த்துக் கூறுவேன். ஆங்கிலத்திலேயே அக்கருத்துக்களைக் கேட்டபோது இருந்ததைக் காட்டிலும் அதனையே வங்காளமொழியில் கூறியவுடன் அவர்களது உவகையும் ஊக்கமும் அதிகமாகக் கிளர்ந்து தோன்ற நான் பன்முறை கண்டுளேன். இதனில் யாதும் வியப்புமில்லை. தாய்மொழியில் வருவதையே எப்பொழுதும் உள்ளமானது எழுந்து எதிர்கொள்ளும்" என்று நனிசாற்றினர். சாற்றி, "ஆங்கிலமே கதியாகத் தாய்மொழியைப் புறக்கணிக்கும் மனிதர் எத்தனை பெரிய நஷ்டமடைகின்றனர் என்பது அறிந்தால் அவ்வாறு செய்யமாட்டார். அது தெரியாதிருப்பது மிகப் பெருங்குறை" என்றனர். மனிதர் உண்மையான மேன்மையை யடையவேண்டுமென்னும் ஆர்வமுடையவர் அனைவரும் தாய்மொழியையே இவ்வகையில் தெய்வமொழியாமென்று சிந்திப்பதே இயற்கை. நம் கவிவரர் இரவீந்திரநாதருடைய கருத்தை நோக்குமிடத்து, இக்கலாநிலயத்தில் வரும் ஆங்கிலப் பேராசிரியர்களுடைய மொழிபெயர்ப்புக்கள் தமிழ்மாத்திரம் தெரிந்திருப்பவர்களுடன் ஆங்கிலம் தெரிந்திருப்பவர்களுக்கும் அதிகம் பயன்படவேண்டுமென்பது எளிதில் விளங்கும். வேறு எது இருப்பினும் இல்லாவிடினும் தாய்மொழிப்பயிற்சியும் அதன்கண் உள்ள மிகவுயர்ந்த இலக்கியங்களின் உணர்ச்சியும் இல்லாதார், இல்லாதாரே. ஆயினும் ஒன்று இங்கு யாவர் உள்ளத்திலும் ஆழ்ந்து ஊன்றவேண்டும். "தாய்மொழியில் நான் அபிமானம் உடையேன்" என்று பொதுக்கூட்டங்களில் பேசிக்கொண்டும் பத்திரிகைகளில் எழுதிக்கொண்டும் தன் கடனைக் கழித்துவிடுவது ஒரு காசிற்குப் பயனில்லை. அம்மொழியைக் கற்கவேண்டும், கற்றுப் பிறர்க்குப் போதிக்கவேண்டும். இவையிரண்டும் செய்வதின்றிப் பல பேசுவதிலும் பேசாதிருத்தலே நலம்.

தாய்மொழியின் நலன்களைப்பற்றிக் கூறிவருமளவில் நம் கவிவரர், "மாதர்கள் எல்லாரும் நன்றாகப் பயின்று தாய்மொழியைப் போற்றி வளர்ப்பவர்களாவது பின்னும் அவசியம். கல்விச்சாலைகளுக்குச் சென்று பயில்கின்றவர்களில் ஆடவர்களைக் காட்டிலும் பெண்களே, ஆங்கில மொழிக்குப் பெரிது அடிமையாகிவிடுகின்றனர். இது மிகவும் வருந்தத்தக்கது. பெண்களேனும் தம் மொழியையும் அம்மொழியிலடங்கியுள்ள நாகரிகத்தையுங் காப்பாராயின், பெரிது நன்மையுண்டாம்" எனக் கூறினர். இந்தச் செவ்வியில், இக் கலாநிலய வாசகர்களும், கலாநிலயத் தமிழ் வகுப்புக்களில் பயில்கின்றவர்களும், தத்தம் இல்லின்கண் ணுள்ள மாதர்களுக்கு, அவ்வப்போது தாம் கற்பவைகளைக் கற்பித்துவரும்படி வேண்டிக்கொள்கின்றோம். இதனைச் சிறிது முயன்று செய்துவருவார்களாயின், வாழ்க்கையின் உருவமும் மணமும் முற்றிலும் வேறாகி உயரியவோர் உவகைபெருகப் பொலியுமென்பதிற் சிறிதேனும் ஐயம் இல்லை.

இதன்பின், "நமது நோக்கம், இப்பத்திரிகை மூலமாகவும், நம் தமிழ் வகுப்புக்கள் மூலமாகவும் பரவுவது மாத்திரமன்றிப் பின்னும் விரையப் பரவுவதற்கு வேறு எவ்வகையில் முயலலாம்" என்று கவிவரரைக் கேட்டேன். அதற்கு, அவர் சிறிது நேரம் சிந்தித்துப் பிறகு, "நாடக அரங்கு இதற்கு நல்லதோர் கருவியாயிற்றே. அதனை இதற்குச் சிறப்பாகப் பயன் படுத்திக் கொள்ளலாமே" என்று கூறி, "ஆயினும், தமிழ்நாடகங்கள் தற்காலம் செவ்விதின் நடைபெறுகின்றனவென்று நினைப்பதற்கில்லை. ஆதலின், அவை நமக்கு ஏற்ற கருவிகளாவது அரிது. தமிழ்பேசும் படக்காட்சிகள் (Tamil talkies) சில கண்ணுற்றேன். ஒன்றேனும் கண்கொண்டு பார்ப்பதற்கேனும் காது கொண்டு கேட்பதற்கேனும் தக்கவைகளாகஇருக்கவில்லை. நடை உடை பாவனை பேச்சு எல்லாம் ஆபாசமாயிருந்தன. எப்படித்தான் இதனை இச் சனங்கள் சகிக்கின்றார்களோ!" என்று கூறினர். கலையுணர்வு மிகுந்த நம் கவிவரர் கூறிய இச் சொற்கள், படக் காட்சிகளுக்குச் சென்று தம் பொருளையும் காலத்தையும் உணர்வின் தன்மையையும் அழித்துக் கொள்கின்ற சனங்களது மனதில் உறைக்குமானால், அவ்வளவும் நல்லதே. அந்த நேரத்தைப் படிப்பதிலும், அந்தப் பொருளினைப் புத்தகங்கள் வாங்குவதிலும் செலவு செய்வார்களாயின், எத்துணை எத்துணை பயன் தாமும் பெற்றுப் பிறர்க்கும் செய்துவைப்பார்கள் என்பதை அவர்களுக்கு அறிவிக்கக் கூடியவர்கள் அம்முயற்சியைப் போதிய அளவு மேற்கொள்ளாமல் வாளா விருப்பதாலன்றோ இந்தப்படி நிகழ்கின்றது. "சனங்கள் எத்துணைக் கெட்டழிந்து கிடக்கின்றார்களென்பதை அறியவேண்டுமானால் அவர் விரும்பிச் செல்கின்ற விளையாட்டு வேடிக்கைகளைச் சோதித்துப் பார்" என்று கூறினர் மேனாட்டுப் புலவர் ஒருவர். இவைகளுக்குப் போவாரைச் சேர்கின்ற பழி இது. எனினும், போகாதாரை இப்பழி சேராதென்று எண்ணுவதற்கில்லை. முன்னவர் மனம் உயரிய நிலையில் பயின்றிருக்கும்படி பின்னவர் என் செய்து அமைத்தார்!

இறுதியாக, நம் கலாநிலயத்திற்குக் கவிவரர் முழு மனதுடன் அளித்த ஆசியைப் பெற்று அவர்பால் விடை கொண்டேன்.

தமிழ்ப்பாடம் 137.

நைடதம்—நளன்தூதுப் படலம்

[565-வது பக்கத் தொடர்ச்சி]

ஒருத்தியா னளனென விருப்ப வுள்ளுறு
விருப்பினு லொருத்தி யான்வீமன் மாதென
மருக்கமழ் பூந்தொடை சூட்ட மன்னவன்
பொருப்புறழ் தடம்புயம் புளகம் பூத்தவே. 44

(உரை). உள் உறும் - உள்ளத்தில் உண்டாகின்ற, விருப்பினுல் - விருப்பத்தினுல், ஒருத்தி - தமயந்தியின் தோழியர்களில் ஒருத்தி, யான் நளன் என - நான்தான் நளன் என்று சொல்லி, இருப்ப - மணமகன்போல் வீற்றிருக்க, ஒருத்தி - வேறு ஒருதோழி, யான் வீமன் மாது என - நான் வீமன் புதல்வியாகிய தமயந்தி என்று சொல்லிக்கொண்டு, மரு-வாசனையை, கமழ் - வீசுகின்ற, பூ தொடை - பூமாலையை, சூட்ட - (நளன் என்று வீற்றிருக்கும்) தோழிக்குச் சூட்டவும், மன்னவன் - (இந்தக் காட்சியைக் கண்ணுற்ற) நளமகாராஜனுடைய, பொருப்பு - மலையை, உறழ் - போன்ற, தட புயம்-விசாலமான தோள்கள், புளகம் பூத்த - மயிர்க்கூச் செறிந்தன.

விரிவுரை:—நாடோறும் தமயந்தி கன்னிமாடம் வந்தெய்தியதும், அவள்பால் பரிகசம் சில பயில்வது தோழியர் வழக்கமாதல் இயல்பே. உவவனமருங்கில் உருவெளி எனும் நலத்தினுல் உறவுறப் புல்லியுவந்த இக்கன்னி தன் கோயி லெய்தினுள். உடனே குறும்புடைத்தோழியர் இன்று என்ன பரிகசஞ் செய்வது என்று சூழ்ந்து முடிக்குமுன், பேதைக் கிள்ளை, 'வந்தனன்நளன்' என நாடகத்தைத் துவக்கியது. இவ்வாறு ஓராது கிள்ளை துவக்கியதைத் தொடர்ந்து நடத்தும் களிப்பும் சூழ்ச்சியும் உடையவர் அந்தத் தோழியர். அன்னமுரைத்த அன்றுதொட்டு நளனின்மீது நாட்டிய உள்ளமுடைய அந்தநங்கைக்கு இவர் இங்கொரு மணம் முடிக்கின்றனர். 'நளன் வந்தனன்' என்றது கிளி. வந்தவனுக்கு மணமாலை சூட்டுவதன்றோ அடுத்தபடி நிகழ்தற்கு உரிய கருமம். ஒருத்தி 'நான்தான் நளன்' என்று மாப்பிள்ளைக் கோலத்துடன் ஆதனத்தில் அமர்ந்தாள். மற்றவள், 'நான்தான் வீமன்மகள்' என்று மணமாலையைச் சூட்டி வதுவையை முடித்தனள். இந்நாடகம் நளனுக்குஎல்லையற்றமகிழ்ச்சியைத் தருவது இயற்கையே.

மலர்ந்தசெந் தாமரைமென் மடலின் மேற்றனக்
கிலங்கிழை யுகிரினு லெழுது பாசுரம்
நலம்பெறக் காண்டலு நண்ணா லார்புக
ழுலம்பொரு தோளினு னுவகை யெய்தினுன். 45.

(உரை) மலர்ந்த - மலர்ந்த, செம் தாமரை -சிவந்த தாமரையினுடைய, மெல் - மென்மையான, மடலின் மேல் - இதழின்மேல், இலங்கு இழை - ஒளிபொருந்திய ஆபரணங்களை அணிந்த தமயந்தி, உகிரினுல் - தனது நகத்தினுல், தனக்கு - தனக்கு (நளனுக்கு), எழுது - எழுதுகின்ற, பாசுரம் - செய்யுள் ஒன்றை, நலம்பெற - நன்றாக, காண்டலும் - பார்க்க நேரவும், நண்ணலார் - பகைவர்களும், புகழ்-புகழ்வதற்குரிய, உலம்பொரு - கல்லையொத்த, தோளினுன் - தோள்களையுடைய நளன், உவகை-சந்தோஷத்தை, எய்தினுன்- அடைந்தான்.

விரிவுரை:—காமத்தால் கைவரை, மரத்திலும் மலரிலும் முடங்கலும் செய்யுளும் எழுதவைத்து, அச்சொன்னலம் கடந்த சுவைபதனில் தாமும் தோய்ந்து களிப்பது கவிவரர் மரபு. ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கிலப் புலமையோர், 'நீ விரும்பியவாறு' (As You like it) என்னும் தமது சிறந்த நாடகமொன்றினில் காதலன் ஒருவனைத் தன் மனங்கவர்ந்த வனிதையின் நலத்தினை பாசுரங்களாக இயற்றி அவைகளை மரத்தினில் பொறித்துப் பாராட்டவைக்கின்றார். அக்காதலன் ஆர்லண்டோ என்பவன். ஆர்லண்டோவையே வரைந்துகொள்ள ரோஸலிண்ட் என்னும் மாதராள் விழைகின்றாள். இடையில் இடையூறுகள் சில நிகழலாக, ரோஸலிண்ட் ஆணுடை தரித்துத் தன் தோழி

193|27

...மீபா என்பவளுடன் காடு அடைகின்றாள். இந்த ரோவிலண்டைத் தேடியவண்ணமாக விருக்கும் ஆர்லண்டோவும் அக்கானகம் எய்தி, மரத்திலும் செடியிலும் காதற் பாசுரங்கள் வரைந்து வரைந்து மனஞ் சிதைந்து ஆறும் நெறி தேடுகின்றான். காமதேவனுக்குப் பொன்வில்லை அளித்துள்ள ஐரோப்பிய மனம், காதற் பாசுரத்தை மரத்தில் தீட்டி வைத்தது. கரும்பு வில்லையும், சுரும்புநாணையும், மலர்க்கணையையும் மன்மதனுக்குத் தந்துள நம்புலவர்கள், தாழைமடல் தாமரையிலை யாளையவைகளை எழுதுபலகைகளாக இழைத்து வைத்தனர். நளனது எழிலைச் சொல்லாலும் சித்திரத்திலும் எழுதி எழுதிக் களிப்பது தமயந்தியின் வழக்கம். இன்று கரந்துவந்துள்ள நளன் அயலே நின்று அவள் எழுதும் பாசுரத்தைக் கண்டுவிட்டான். உள்ளத்திற் பொங்கி மிகுந்த உவகையால் அவன் தோள்கள் பூரித்தன.

கானம ரலங்கல் மாலைக்
 கடவுளர் விடுப்ப வந்த
பானலங் கடந்த தீஞ்சொற்
 பணைமுலைப் பாவை நல்லா
ரூனொடு பழுகி நெய்த்தோ
 ருமிழ்ந்துவெம் புலவு நாறு
மானவேல் வீம னீன்ற
 வனிதையை யினிது கண்டார். 46

(உரை). கான்-வாசனை, அமர்-சேர்ந்திருக்கின்ற அலங்கல்மாலை - மாலையை அணிந்திருக்கின்ற, கடவுளர் - தேவர்கள், விடுப்ப வந்த-ஏவியபடி வந்த, பால் நலம் கடந்த - பாலின் சுவையைக் காட்டிலும் மிகுந்த, தீம் - இனிமையான, சொல்லார் - சொற்களை உடையவரும், பணை - பருத்த, முலை-முலைகளை உடையவர்களுமான, பாவைநல்லார் - பதுமை போன்று அழகிய தேவலோகமாதர்கள், ஊன் ஒடு - பகைவர்களது மாமிசத்தில், பழுகி - பழகி, நெய்த்தோர் - இரத்தத்தை, உமிழ்ந்து - கக்கி, வெம்-கொடுமையான, புலவு நாறும் - புலால் நாற்றத்தை வீசுகின்ற, மான - சிறந்த, வேல் வீமன் - வேலையுடைய வீமராஜன், ஈன்ற-பெற்ற, வனிதையை - தமயந்தியை, இனிது கண்டார் - நன்கு கண்டார்கள்.

விரிவுரை:—தமயந்தியை மணக்க நளனும் விழைந்திருப்பானாதலால், தங்களில் ஒருவரை அவள் வரைந்து கொள்ளுமாறு விரகிலாது அவன் தூதுசொல்வனோ என்ற சந்தேகம் இருந்ததாற்றான் சேயிழை தூது செல்லவேண்டுமென்று முன் இந்திரன் குறிப்புணர்த்தினான். எனவே தங்கள் காரியம் சித்திபெற வேண்டுமென்னும் ஊக்கத்தால், இந்திரன் வருணன் அக்னி யமன் ஆயவர் தத்தம் சார்பில் தமயந்தியினிடம் பேசும்பொருட்டுத் தேவகன்னியர்களில் ஒவ்வொருத்தியைத் தூதாகத் தெரிந்து அனுப்பியுளர்.

எய்திய மகளிர் தம்மி
 லிமையவர் தலைவன் றூதி
யையரி நெடுங்கட் செவ்வா
 யணங்கிற்கு மணங்கு போல்வாய்
கொய்துணர்த் தருவி னிழற்
 கோமகன் பணியாற் போந்த
செய்திநீ கேட்டி யென்று
 சீறடி வணங்கிச் சொல்வாள். 47.

(உரை). எய்திய - தமயந்தியின் கன்னிமாடம் வந்தடைந்த, மகளிர்தம்மில்-தேவலோகப் பெண்களில், இமையவர் தலைவன் தூதி-தேவர்களின் தலைவனான இந்திரனுக்காகத் தூதுவந்தவள், "ஐ அரி - அழகிய வரிகள் அமைந்த, நெடும்கண் - நீண்ட கண்களையும், செவ்வாய் - சிவந்த வாயையும் உடையளாய், அணங்கிற்கும் அணங்குபோல்வாய் - இலக்குமியின் திருவிற்கே காரணமாகிய ஒரு இலக்குமி போன்றவளே, (என்று தமயந்தியை அழைத்து)கொய்துணர்-பறிப்பதற்கான பூங்கொத்துக்களை உடைய, தருவின் நிழல்-ஐந்து தருக்களின் நிழலில் இருக்கின்ற, கோமகன்-தேவேந்திரனது, பணியால் - ஏவலில், போந்த - நான் வந்துள்ள, செய்தி-விஷயத்தை, நீ கேட்டி - நீ கேட்பாயாக" என்று-என்று,சீறடி-தமயந்தியின் சிறிய பாதங்களை, வணங்கி-பணிந்து, சொல்வாள்- பின்வருமாறு பேசலானாள்.

இருவிசும் பொருகோ லோச்சி
 யெதிலர்க் கடந்து தேவர்
பரவிநின் றிறைஞ்ச நாளும்
 பனிமலர்த் தருவி னீழ
லரியணைப் புறத்து வைகு
 மண்ணலுக் கமிர்த மன்ன
யுருவிலா னொருவன் செய்யு
 முறுபகை காத்தல் வேண்டும். 48

(உரை). இருவிசும்பு-பெரியவானுலகில், ஒருகோல் ஓச்சி-தனிச்செங்கோல் செலுத்தி, எதிலர்க் கடந்து, பகைவர்களை யெல்லாம் வென்று, தேவர் பரவி நின்று இறைஞ்ச - தேவர்கள் துதித்து வணங்கி நிற்க, பனி மலர் - குளிர்ச்சிபொருந்திய மலர்கள் நிறைந்துள்ள, தருவின் நீழல் - பஞ்சதருக்களின் நிழலில் (அமைந்துள்ள), அரிஅணைப் புறத்து - சிங்காதனத்தினிடம், வைகும் - தங்கி இருக்கும், அண்ணலுக்கு-பெருமையில் சிறந்த இந்திரனுக்கு, அமிர்தம் அன்னாய் - அமிர்தம் போன்றவளே, உருவிலான் ஒருவன் - உருவமில்லாதவனாகிய ஒருவன், செய்யும் - செய்கின்ற, உறு பகை - மிகுந்த பகையினின்று, காத்தல் வேண்டும் - (இந்திரனை) நீ காத்தருள வேண்டும்.

விரிவுரை:—தூதியாக வந்த அவள் பேசும் முறையும் நயமும் மிகப் பெரிது. முதல் மூன்று அடிகளால் இந்திரன் பெருமையை உரைக்கின்றாள். பிறகு அவ்வளவு பெருமை யுள்ளவனுக்கு அமிர்தம்போன்றவளே என்று தமயந்தியை விளிக்கின்றாள். பின்னர் வந்த காரியம் என்ன வென்பதை வெளிப்படையாக விளம்பாமல் உருவிலான் ஒருவனால் நேரும் பகையினின்று இந்திரனைக் காத்து அளித்தல் வேண்டுமென அவளை இரக்கின்றாள். 'நீ இந்திரனை மணக்கவேண்டுமென்று' வெள்ளையாய் அவள் சொல்லவில்லையாயினும் இதன் பொருள் யாதெனத் தமயந்திக்கு விளங்காமலிருந்திராது. ஆயினும் அத்தூதியின் உரைநயத்தை உவந்து பின்னுஞ் சிறிது கேட்க விழைந்தவளாகி அவளுக்குத் தன் செவியை மறுத்திலள்போலும்.

தமயந்தியின் காதலுக்கு இப்பொழுது இந்திரனோடு இகலி நிற்பவன் நளன். இவன் உருவில்லாதவனாகவும் இருக்கின்றான். 'உருவிலான் ஒருவன் செய்யும் உறுபகை காத்தல் வேண்டும்' என்று இத்தூதி மன்மதனைக் குறித்துரைத்த சொற்கள் நளனுக்கும் அவளறியாமலே பொருந்தக் கூடியனவா யிருக்கின்றன. ஆதலின் இது ஓராற்றுரைத்தலணியின்பாற் படும்.

எம்மிறை யிளவற் காக
 விருங்கடல் கடைந்து வாசச்
செம்மலர்த் திருவை யீந்த
 தேவர்வா சவர்க்கு மின்னும்
கைம்மலர் வருந்த விக்குக்
 கடல்கடைந் துழலா வண்ணம்
பொம்மல்வெம் முலையா யன்னோர்க்
 கின்னருள் புரிதல் வேண்டும். 49.

(உரை). எம் இறை - எமது தலைவனான இந்திரனது, இளவற்கு ஆக - தம்பியாகிய உபேந்திரனுக்காக, இரும் கடல் - பெரிய கடலை, கடைந்து - கடைந்து, வாசம் - வாசனை பொருந்திய, செம்மலர்த் திருவை - செந்தாமரை மலரில் வசிக்கும் ஸ்ரீ தேவியை, ஈந்த - தந்த, தேவர் - தேவர்கள், இன்னும் - இனி மேலும், வாசவற்கும் - தேவேந்திரனுக்காகவும், கைமலர் வருந்த - மலர்போன்ற கைகள் நோவ, இக்குக் கடல் - கரும்புக் கடலை, கடைந்து உழலாவண்ணம்- கடைந்து வருந்தாமல், பொம்மல் வெம் முலையாய் - பருத்தெழுந்து விருப்பத்தை விளைவிக்கின்ற முலைகளை உடையவளே, அன்னோர்க்கு - அந்தத் தேவர்களுக்கு, இன் அருள் - உனது இனிய அருளை, புரிதல் வேண்டும் - தந்து உதவ வேண்டும்.

விரிவுரை:—இந்திரன் உற்ற இடுக்கணைக் களையுமாறு முன் வேண்டிய தூதி இச்செய்யுளால், தேவர்கள் கரும்புக்கடல்கடைந்து உழலாவண்ணம் நீ அவர்களைக் காப்பாய் என்று வேண்டுகின்றாள்.

மாயிரு ஞாலந் தன்னின்
 மகம்பல வியற்றிப் பெற்ற
மீயுயர் பசும்பொன் னாட்டின்
 மேதகு செல்வ மெல்லா
மேயின நின்பா லன்றோ
 விமையவர்க் கிறைவன் பானின்
சேயரிக் கடைக்க ணோக்கஞ்
 சிறிதருள் புரியின் மாதோ. 50.

(உரை). சே அரி - சிவந்த வரிகளை உடைய, நின் கடைக்கண் நோக்கம்-உனது கடைக்கண்ணின் பார்வையை, சிறிது அருள் புரியின் - இந்திரன்பால் செலுத்திச் சிறிது அருள் புரிவாயாயின், மா இரு - மிகவும் பெரிய, ஞாலம்தன்னில் - பூமியிலே, மகம் பல - யாகங்கள் பல, இயற்றி - செய்து முடித்து, பெற்ற - இந்திரன் தனதாகப்பெற்ற, மீ - மிகவும், உயர் - உயர்ந்த, பசும்பொன் நாட்டின்-பசும்பொன்னுலாகிய தேவலோகத்தின், மேதகு - பெருமை பொருந்திய, செல்வம் எல்லாம்-எல்லாச்செல்வமும், நின் பால் - உன்னிடத்தில், ஏயின அன்றோ - வந்தடைவது திண்ணமன்றோ. (மாதோ - அசை).

விரிவுரை:—ஒன்றினைக் கொடுத்து அதற்குச் சமமானதாகவேனும் உயர்ந்ததாகவேனும் இருக்கின்ற மற்றொன்றைப்பெறுவதாகத் திறமையுடன் கூறுவது பரிவருத்தனையணியென முன்னர்ச்செப்பியிருக்கின்றோம். இங்குக் கடைக்கண் நோக்கஞ் சிறிது தந்து பொன்னுலகச் செல்வத்தைப் பெரிது பெறவியலும் என்று காட்டுவது அப் பரிவருத்தனை அணி ஆகும்.

கம்பராமாயணம்

199187

கிஷ்கிந்தாகாண்டம்—7. வாலிவதைப் படலம்

[568-வது பக்கத் தொடர்ச்சி]

விலங்கே யென்னில் விபரித மாமே.

"பாரவேந்தில பழிப்பெய்த விதியினின்றும் விலகி, மறைந்துநின்று நிராயுதன் மார்பில்பாணம் எய்து அடாதகாரியம் செய்வதோ ஒரு நீ! இதற்குக் காரணம்செப்புவாய்" என்றஅவ் வாலிக்கு இராமன் எதிர் விளம்புவான்:—

 பிலம்புக் காய்நெடு நாள்பெய ராபெறுப்
 புலம்புற் றன்வழிப் போதலுற் றன்றனைக்
 குலம்புக் கான்ற முதியர் குறிக்கொளீ
 யலம்பொற் றூரவ னேயர சென்றலும்

[முன் மாயாவியைத் தொடர்ந்து பிலத்துள் புகுந்த நீ வெகு காலம் மீளாமல் இருந்துவிட்டாய் என்ற காரணத்தால், துயரடைந்து, நீ சென்ற வழியில் செல்லத் தொடங்கிய சுக்கிரீவனை, உன் குலத்து அறிவிற் சிறந்த பெரியோர், நோக்கி, "அசைகின்ற பொன்மாலை யணிந்தவனே, நீ இந்த இராச்சியத்தை ஆளக் கருதுவாய்" என்று கூறவும்]

 வான மாளவென் றம்முனை வைத்தவன்
 றானு மாளக் கிளைபி னிறந்தபிற்
 றியானு மாள்வெ னிருந்தர சாள்கிலென்
 ஊன மான வுரைபகர்ந் தீரென

[சுக்கிரீவன், "என் தமையனைத் தேவலோகத்திற்கு அனுப்பிய மாயாவி சாகவும் அவன் சுற்றத்தார் அழியவும் கொன்று நானும் இறப்பேனேயன்றிப் பிழைத்திருந்து இவ்வரசு ஆளமாட்டேன். எனக்குத் தகாவார்த்தையைச் சொன்னீர்" என்று மறுக்கவும்]

 பற்றி யான்ற படைத்தலை வீரரு
 முற்று ணர்ந்த முதியரு முன்பரு
 மெற்று நும்மர செய்துவை யாமெனக்
 கொற்ற நன்முடி கொண்டதக் கோதிலான்

[மீண்டும், சிறந்த சேனாதிபதிகளும், முழுதுமுணர்ந்த முதியவரும் மற்றுமுள்ள பெரியோர்களும் சுக்கிரீவனைப் பிலத்தினுள் போகவிடாமல் பிடித்துக்கொண்டு, "எது எவ்வாறாயினும், உங்கள் குலத்திற்கு உரிய அரசாட்சியை நீ அடையக்கடவாய்" என்று வற்புறுத்த, குற்றமற்றவனாகிய அந்தச் சுக்கிரீவன்கொற்றமுடைய நல்ல கிரீடத்தைச் சூட்டிக்கொள்ள நேர்ந்தான்]

 வந்த வுன்னை வணங்கி மகிழ்ந்தனன்
 எந்தை யென்க ளினத்தவ ராற்றலிற்
 றந்த வுன்னர சென்று தருக்கிலான்
 முந்தை யுற்றது சொற்ற முனிந்தநீ

[பிறகு,திரும்பிவந்த உன்னைப் பார்த்து மகிழ்வடைந்து வணங்கி, "எம்குலத் தலைவனே, நமதினத்தவர் என்னிடத்தில் வலியக்கொடுத்த உன் அரசாட்சி இது" என்று, செருக்கில்லாதவனான சுக்கிரீவன் முன்பு நிகழ்ந்தசெய்திகளைச் சொன்ன வார்த்தைகளை வெறுத்த நீ]

கொல்ல லுற்றனை யும்பியைக் கோதவற்
கில்லை யென்ப துணர்ந்து மிரங்கலை
யல்லல் செய்யே லுனக்கப யம்பிழை
புல்ல லென்னவும் புல்லலை பொங்கினாய்

[அவனிடத்தில் பிழையில்லை என்பதை உணர்ந்தும், இரக்கம் கொள்ளாதவனாய், “என்னைத் துன்பப்படுத்தாதே, உனக்கு அபயம், என் குற்றத்தைப் பொறுத்துக் கொள்” என்று சுக்கிரீவன் வேண்டவும் நீபொறுக்காமல் சீறி உன் தம்பியைக் கொல்லத்தொடங்கினாய்]

ஊற்ற முற்றுடை யானுனக் காரமர்
தோற்று மென்று தொழுதுயர் கையனீ
கூற்ற முண்ணக் கொடுப்பனென் றெண்ணினாய்
நாற்றி சைக்கும் புறத்தையு நண்ணினான்

[மிகுந்த வலிமையுடைய சுக்கிரீவன், ‘அரிய போரில் உனக்குத் தோற்றோம் யாம்’ என்று சொல்லித் தலைமேற்கொண்டு தொழுத கையனாய் நிற்கவும், நீயோ, இவனுயிரை எமன் உண்ணக்கொடுப்பேன் என்று எண்ணினாய். அவன்பயந்து நான்கு திக்குக்களின் கடையெல்லையையும் ஓடிச் சேர்ந்தான்]

அன்ன தன்மை யறிந்து மருளலை
பின்ன வன்னிவ னென்பதும் பேணலை
வன்னி தானிடு சாப வரம்புடைப்
பொன்ம லைக்கவ னண்ணலிற் போகலை

[அப்படி அவன் ஓடுவதை யறிந்தும், நீ அருள்செய்யாமல், இவன் உன் தம்பி என்பதையுங் கருதாதவனானாய். பின்னர், இச்சுக்கிரீவன், மதங்கமுனிவர் இட்டசாபத்தை எல்லையாகவுடைய அழகிய ரிசியமூக பருவதத்தைச் சேர்ந்ததனால் நீ அங்குச் செல்லாமல் விட்டாய்]

ஈர மாவது மிற்பிறப் பாவதும்
வீர மாவதுங் கல்வியின் மெய்ந்நெறி
வார மாவது மற்றொரு வன்புணர்
தார மாவது தாங்குந் தருக்கரோ

[இரக்கம் எனப்படுவதும், நற்குலப்பிறப்பு எனப்படுவதும், வீரம்எனப்படுவதும், கற்றகல்வியின் உண்மையான நெறிக்கு உரியதாவதும், மற்றொருவன் மணந்த மனைவியைக் கற்புநிலை தவறும்படி பாதுகாக்கின்ற பெருமையே யன்றோ]

மறந்தி றம்பல் வலிய மெனுமனம்
புறந்தி றம்ப லெளியவர்ப் பொங்குத
லறந்தி றம்ப லருங்கடி மங்கையர்
திறந்தி றம்ப றெளிவுடை யோர்க்கெலாம்

[தெளிந்த அறிவுடையவர்களுக்கெல்லாம்,—தாம் வலியுடையவர் என்று கருதி, மனம் வீரத்தினின்று தவறி, எளியவர்மீது கோபித்தலும், பராக்கிரமச் செயலிலிருந்து தவறுதலும், அரிய பாதுகாவலையுடைய மாதர்களின் கற்பின் வலிமையை அழித்தலும், தருமத்தினின்று தவறுதலு மாகும்]

தரும மின்ன தெனுந்தகைத் தன்மையு
மிருமை யுந்தெரிந் தெண்ணலை யெண்ணினால்
அருமை யும்பிற னாருயிர்த் தேவியைப்
பெருமை நீங்கினை யெய்தப் பெறுதியோ

[தருமம் இன்னதென்னும் பெருமையையும், இம்மை மறுமைகளின் பயன்களையும் எண்ணமற் போயினாய்; அவைகளை எண்ணி யிருப்பாயானால், அருமையான உன் தம்பியின் அரிய உயிர்போன்ற மனைவியைப் பெருமை யிழந்து சேர்ந்திருப்பாயோ]

ஆத லானு மவனெனக் காருயிர்க்
காத லானென லானுநிற் கட்டனென்
ஏதி லாரு மெளியரென் றாலவர்
தீது தீர்ப்பதென் சிந்தைக் கருத்தரோ

[நீ இவ்வாறெல்லாம் செய்தபடியாலும், அச்சுக்கிரீவன் எனக்கு உயிர்போன்ற நண்பன் ஆவதாலும், உன்னைக் கொன்றேன். அயலாராக இருப்பினும் அவர் எளியவர்களாயிருப்பாராயின் அவருடைய துன்பத்தை நீக்குதல் என் மனத்தின் எண்ணமாம்]

என்று இராமபிரான் எடுத்துக் கூறினான். “குற்றமற்ற உன் தம்பியைக் கொல்லப் புகுந்தனை; அவன் தஞ்சம் புகுந்தும் தண்ணளி காட்டினாயல்லை; அவன் ஆருயிர் மனைவியை வெளவினை; ஆதலின் நிற்கட்டனென்” என இராமன் இயம்பிய இவை, “என்பால் எப்பிழை கண்டாயப்பா” என்று வாலி கேட்ட ஒரு கேள்விக்கே எதிர்மாற்றமாம். இதனுள்ளும் “கோது அவற்கு இல்லை என்பது உணர்ந்தும் இரங்கலை’ என்றது ஏற்புடைத்தன்று. கோது அவனுக்கு இல்லை என்பதை வாலி உணர்ந்தானேயாயின் பின் அவனைக் கொல்ல நினைந்தது முற்றிலும் குறிப்பற்றதாகும். “சுக்கிரீவன் முதலாயினோர் எத்துணை கூறியும், கோது அவனுக்கு இல்லை என்பதை உணராமற் போயினாய்” என்பதை வேண்டுமானால், வாலியின் குற்றங்களில் ஒன்றாக இராமன் கூறியிருக்கலாம். அது எவ்வாறாயினும், வாலியைக் கொன்ற செய்கைக்கு இராமன் கூறிய இவை காரணமாகுமே யன்றி, அச்செயலைச் செய்த வகைக்கு யாதும் அமைதி இராமன் வாசகத்தில் காணற்கில்லை. “நேரும் அன்று, மறைந்து நிராயுதன் மார்பில் ஏன் எய்தாய்” என்று வாலி கேட்டு முடித்த கேள்விக்கு ஒரு அமைதி காட்ட இராமன் முயன்றானு மல்லன். இக்கேள்விக்கு இராமன் இந்த மறுமொழி கூறாமல் விட்டானெனின், வான்மீகத்தில், வாலி அக்கேள்வியை நேர்முகமாகக் கேட்டானுமல்லன். “என் முன் நின்று போர் செய்திருப்பீரேயாகில் நீர் இந்நேரம் என்னால் கொல்லப்பட்டு எமலோகம் போயிருப்பீர்” என்று வாலி இயம்புவதினின்று தன் வீரத்திற்கஞ்சியே இராகவன் எதிரேவந்து போர் செய்யாமல் மறைந்துநின்று எய்தான் என்னும் முடிவு கொண்டிருந்தனன் என்று ஒருவாறு ஊகிக்கலாம். இனி, வான்மீகத்தில் இராமன் வாலிக்குக் கூறிய எதிர்மொழியை இவ்விடத்தில் நோக்கல் தகும்.—

“புண்பட்டுப் பூமியில்விழுந்து ஒளியிழந்த வொரு சூரியன் போலவும், நீரைப்பொழிந்த மேகம் போலவும், அவிந்த அக்கினிபோலவும் தோன்றிய வாலி இவ்வாறு கொஞ்சம்கடிந்து தருமத்தோடொத்தசொற்களைக் கூறினான். அப்போது இராமன் அவனை நோக்கித் ‘தருமம், அருத்தம், காமம், லௌகிகம் இவைகளை யறியாமல் சிறுபிள்ளை போல நீர் என் என்னைக் குற்றங் கூறுகின்றீர்? ஆசிரியர்களால் அங்கீகரிக்கப்பட்ட புத்திமான்களாகிய பெரியாரைக் கேட்டறியாமல் வானரத் தன்மையால் நீர் என் இவ்வாறு பேசுகின்றீர்? மலைகளும்காடுகளும் செறிந்த இப்பூமிமுழுதும் இக்ஷ்வாகு வமிசத்தவரைச் சேர்ந்தது. இதிலுள்ள மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் மானுடர்களுக்கும் தண்டனை புரிதற்கும் அநுக்கிரகம் செய்தற்கும் உரியவர்கள் அவர்களே. இப்போது உண்மையைக்கடைப்பிடித்து நேர்மையுடனொழுகும் தருமாத்துமாவும், தருமார்த்தகாமங்களையறிந்தவருமாகிய பரதர் இவ்விராச்சியத்தைப் பரிபாலித்து, நிக்கிரகாநுக்கிரகம்செய்து வருகின்றனர். நியாயம் வணக்கம் உண்மை பராக்கிரமம் என்னும் இன்னவைகளையுடைய அரசர்களே காலமும் இடமும் தெரிந்து நடப்பவர்களாவாரெனப் பெயர் பெறுவார்கள். நாமும் மற்ற அரசர்களும் பரதருடைய ஆணையை மேற்கொண்டு தருமத்தை நிலைபெறச் செய்ய உலகமெங்கும் சஞ்சரித்து

வருகின்றோம். தரும சிந்தையுள்ள பரதர் இப்புவியைப் பாதுகாத்துவருகையில் யார்தாம் தருமத்தினின்றும் விலகி நடக்கவல்லவர்? எங்களுக்கு விதிக்கப்பட்ட தருமத்தில் வழுவாமல் நின்று பரதருடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு நாங்கள், அறநெறி தப்பிநடப்பவர்களை விதிப்படி சிக்ஷித்து வருகின்றோம். நீர் தருமத்தைக் கெடுத்துக் காமத்தின் வசப்பட்டு அநியாயங்கள் செய்து அரசர்க்கு உரிய நீதிமார்க்கத்தினின்று தவறியிருக்கின்றீர். அறநெறியிற் செல்கின்ற தந்தை தமையன் குரு ஆகிய இம்மூவரும் பிதாக்களாகப் பாவிக்கப்படுவர்; தம்பி, தநயன், சீடன், ஆகிய இம்மூவரும் தருமம் வழுவாமல் நிற்பாராயின் புத்திரராகப் பாவிக்கப்படுவதற் குரியவர். இவற்றிற்கெல்லாம் தருமமேதான் காரணம். பெரியார்கள் உபதேசித்திருக்கும் தருமம் வெகு நுட்பமானது; மிகவரிதில் அறியத் தக்கது. சர்வபூதங்களுடைய உள்ளத்திலும் இருக்கும் பரமாத்துமாவே தருமங்களின் நன்மைதீமைகளை யெல்லா மறியவல்லது. உறுதியில்லாத மனமுடைய நீர் குருடனுக்குக்குருடன் வழிகாட்டுவதுபோல் யாதொருசிக்ஷையுமில்லாது உம்மைப்போல் சபலசித்தர்களாயுள்ள வானரர்களோடு சகவாசம் பண்ணித் தருமத்தின் சூக்ஷ்மத்தைத் தெரிந்துகொள்வ தெப்படி? நான் உமக்கு வெளியாய்ச் சொல்லுகின்றேன் கேளும். என்னை நீர் நிந்திக்க நியாயமேயில்லை. கோபத்தினால் உம்மை நான் கொன்றேனென்று நீர் எண்ணவேண்டாம். நான் உம்மைக் கொன்றதன் காரணமாவது, புராதனமாயுள்ள தருமத்தை விட்டுவிட்டு நீர் உம்முடைய தம்பியின் மனைவியைக் கவர்ந்துகொண்டீர் என்பதே. பாப கருமங்களைச் செய்துவருகின்ற நீர் அந்த மகாத்துமாவான சுக்கிரீவனுடைய மனைவியாயும் உமக்கு மருமகள் போன்றவளாயும் இருக்கின்ற உருமை என்பவளை வைத்திருக்கின்றீர். நீர் தருமத்தினின்றும் விலகிவிட்டீர். நான் இதற்காக உம்மை இப்போது தண்டித்தேன். வானர சிரேஷ்ட, தருமத்துக்கு விரோதமாயும் உலகவழக்கத்தை மீறியும் நடப்பவனுக்குத் தண்டனையன்றி மற்றொன்றும் யுக்தமாய்க் காணவில்லை.

நான் நல்ல க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவன். நீர் செய்த பாபச்செய்கையைக் கேட்டு என்மனமோ சகிக்கவில்லை. காமவசத்தனாய்த் தன்னுடைய மகள், தன் தங்கை, தன் தம்பியின் மனைவி இவர்களைக் கைபற்றுபவனைக் கொல்லவேண்டுமென்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. நாங்கள் இப்புவியை ஆளும் பரதருடைய ஆணையை அநுசரித்து நடப்பவர்கள்; நீர் தருமத்தை மீறினவர். ஆகவே நாங்கள் எவ்வாறு உபேக்ஷையாக விருக்கமுடியும்? வெகு நீதிமானும் தெரிந்தவருமான பரதர், காமத்தில் மூழ்கி நெறிதப்பி நடப்பவர்களைச் சிக்ஷைசெய்யவேண்டுமென விதித்திருக்கிறார். நாங்களும் அவருடையகட்டளையை விதிப்படி நிறைவேற்றிக்கொண்டு உம்மைப்போல் உலகமரியாதைகளைப் பேதிக்கின்றவர்களைத் தண்டிப்பதற்காகவே சஞ்சரித்து வருகின்றோம். லக்ஷ்மணனைப்போலச் சுக்கிரீவர் எனக்கு நண்பராயினார். அவர் தமது மனைவியையும் நாட்டையும் தாமடையவேண்டுமென்றுஎன்னுடையநன்மையை நாடத் துணிந்தார். நான் அவருக்கு அவரது மனைவியையும் நாட்டையும் மீட்டுக்கொடுப்பதாக வானரர்கள்முன் வாக்களித்தேன். நான்செய்த பிரதிக்கினையைநிறைவேற்றுதுவாளாவிருப்பேனோ? தருமசாஸ்திரத்தை யநுசரித்தே இவ்விதமான பெரிய காரணங்களால் நான் உம்மைத் தண்டித்தேன். நீர்இதை அறிந்துகொள்ளும். உம்மை நான் தண்டித்தது தருமமே. அன்றியும் ஒருவன் தனது நண்பனுக்கு உதவிசெய்யவேண்டியதும் தருமமே. நன்று யாலோசித்துப் பார்க்குமிடத்து நீர் செய்த அக்காரியத்துக்கு இத்தண்டனை எவ்விதத்தாலும் தருமமே யன்றி வேறன்று. இதைப்பற்றி மநு என்பவர் இரண்டு சுலோகங்கள் சொல்லியிருக்கின்றார்; அவை தருமசாஸ்திரமறிந்த யாவராலும்மிகவும் மதிக்கப்படுகின்றன. அவற்றைக் கேளும்:—பாபஞ்செய்தவர்கள் அரசனால் தண்டிக்கப்பட்டு அப் பாபம் நீங்கிப் பிறகு புண்ணியம் புரிந்தோரைப்போலப் புனிதராகிச் சுவர்க்கமடைகின்றனர். பாபம் செய்தோர் தங்களுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு அதற்குத்தக்க தண்டனையையடைந்தாவது மன்னிக்கப்பட்டாவது அந்தப் பாபத்திலிருந்து விடுபடுகின்றனர். பாபத்திற்குத் தக்க தண்டனை விதிக்காத அரசன் அந்தப்பாபத்தைத் தனே யநுபவிப்பான். உம்மைப்போலப் பெரும்பாபம் இயற்றிய ஒருபௌத்த சன்னியாசியை எங்கள் குலத்து அரசரான மாந்தாதா இவ்விதமாகவே முன் தண்டித்திருக்கின்றார். மற்றுமுள்ள அரசர்களும் பாபம் செய்தோரை இவ்விதமாய்த் தண்டித்திருக்கின்றார்கள். குற்றவாளிகளும் தாங்கள் இயற்றிய கொடுமைகளுக்காகப் பிராயச்சித்தம் செய்துகொண்டு அப்பாபத்தைப் போக்கியிருக்கின்றனர். ஆகையால், வானர சிரேஷ்ட, நீர் இனி வீணாகப் பரிதபிக்கவேண்டாம். உமது பாபத்துக்குத் தக்கபடியே தருமாநுசாரமாக நான் தண்டனை செய்தேன். நாங்கள் எங்க ளிஷ்டப்படி நடப்பவர்களல்லர். உம்மை நான் இப்பொழுது வதைத்ததற்கு மற்றுமோர் காரணமுமுண்டு. அதையும் சொல்லுகின்றேன் கேளும். அதைக்கேட்டபின் என்மீது கொள்ளும் கோபத்தை ஒழித்துவிடும். நீர் பேசினதால் எனக்குக் கோபமுமில்லை, மானஸ்தாபமுமில்லை. மாமிசத்தை அபேக்ஷிக்கின்ற மனிதர்கள் அநேகமிருகங்களை வலைகளாலும், கயிறுகளாலும், பலவிதமான கண்ணிகளாலும், எதிர்ப்பட்டும் மறைந்து நின்றும் பிடிக்கின்றார்கள். அவர்கள் அம் மிருகங்களைப் பயந்தோடும்பொழுதும், நம்பிநிற்கும்பொழுதும், சண்டையிடும்பொழுதும், பராக்காயிருக்கும்பொழுதும், குத்தியும் அடித்தும் கொல்லுகின்றார்கள். அதற்குத் தோஷம் ஒன்றும் சொல்லப்படவில்லை. தருமத்தை நன்றாக உணர்ந்த இராஜரிஷிகளும் வேட்டையாடியிருக்கின்றார்கள். ஆகையால் நான் உம்மைக் கொன்றேன். நீர் வானரஜாதியானதால் நீர் என்னுடன் போர்புரிந்தாலும் புரியாவிட்டாலும் உம்மை நான் கொல்லுவதில் தோஷமில்லை. அடைதற்கு அரியதருமத்தைநிலைநிறுத்திப் பிராணிகளுக்குச் சுகத்தை விளைவிப்பது அரசர்களின் கடமை யென்பதில் சந்தேகமேயில்லை. ஆகையால்அரசர்களை வருத்துவதும் அவர்கள் மேல் கோபங்கொள்வதும், அவர்களுடைய யோக்கியதையைக் குறித்து ஆக்ஷேபிப்பதும் அவர்களைப்பற்றிப் பிரியமற்ற சொற்களைச்சொல்வதேனும் கூடாது. அவர்கள் மானுட உருவங்கொண்டு பூமியில் சஞ்சரிக்கும் தேவர்கள். நீர் தருமம் இன்னதென்றுணராமல், கோபத்தால், முன்னோர்களுடைய தருமத்தை அநுசரிக்கும் என்னைத் தூஷிக்கின்றீர்” என்று சொன்னார்.

ஆதலின் வாலிக்கு இராமன் வடமொழியிற் கூறிய இவ்வுத்தரத்தினால், வாலியைத் தான் வேட்டை விதிகளுக்கு இலக்காகவல்ல ஓர் விலங்கேயாக மதித்தான் போல் பேசும் பெற்றி தெரியவருகின்றது. மறைந்து நின்று தன்னை யெய்ததைப் பெரும் பிழையாக வாலி அங்கு வாதித்தானல்லனாயினும் இராமன் வலியப் புகுந்து, நியதிபற்ற விலங்குவேட்டை வழக்கத்தைத் தன்பக்கல் உதவிக் கழைத்துக்கொள்வது எத்துணை எத்துணை அநியாமுரண்கள் விளைவிக்கும் என்பதை ஓர்ந்தனனாயின் அது செய்திரான். அன்றி, அம்முரணைக் காணவல்ல நுண்மதியின் ஆற்றல் வாலிக்கு இல்லாமை அறிந்தே அதனைக் கூறத் துணிந்தனன் போலும்.

நாமகள் ஆசிரிய விருத்தம்

ஏர்கொண்ட முக்கணன் சடைகொண்ட விளமதியி
னெழில்கொண்ட நிலதநுதலும்
ஏறுமயில் வாகனன் கைக்கொண்ட கூர்வே
லிரண்டுகொண் டொளிர்விழிகளும்
நீர்கொண்ட குமுதமலர் நிறைகொண்ட திருவாயும்
நித்திலங் கொண்டநகையும்
நெடியவன் வாய்கொண்டவேய்கொண்டதோளுமு
கேர்கொண்ட வளமுலைகளும் [கை
கார்கொண்டமின்னிடையு மனமையு மொலிகொண்ட
கனகதண் டைக்கால்களும்
கண்கொண்டு கண்டுளங் களிகொண்டு வாழ்ந்திடக்
கருணைகொண் டிடுவதெந்நாள்
சீர்கொண்ட பாடலை நிறைகொண் டுளங்கொண்ட
தேவியே கருணைபுரிவாய்
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 1.

ஓயாம லெவர்கட்கு மொன்பொரு ளளிக்கின்ற
வுயர்குறளொ ரைந்தருவாய்
ஒருநால்வர் திருவாயி னுதவுமறை சிவஞான
முறைபோக முதவுமமுதாய்
மாயாத விருதேவர் மணியடிரு மணிகளாய்
மாமூல னருள்மந்திரம்
வற்றாத பால்பொழிந் தருள்காம தேனுவாய்
வண்டமிழ்ப் புலவர்சுராய்
வேயாத மாடமலி கூடலம் பதியாசு
மேவுமத் தாணியாக
விண்ணுலகு மண்ணுலக மாகவர சாள்கின்ற
வெண்டாம ரைச்செல்வியே
தேயாத கல்வியுஞ் செல்வமுந் தந்தனரு
திருவடிக் காளாக்குவாய்
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 2.

மருளேறு நெஞ்சகத் தெண்ணாயிரஞ் சமணர்
வானேறு சமுவேறிட
மன்னனுடல் குளிரேற வைகைநதி யேடேற
வாளரியின் மாடேறியும்
இருளேறு கள்ளிரவில் நிலவேறு சென்னியனை
யிருதரந் தூதேவியும்
இடியேறு புத்தனுயர் முடியேற வொருமதலை
யெழிலேறு கரையேறியும்
பொருளேறு மருமறைப் பூட்டேறு கதவுதாழ்
போக்கியு மடைத்துமாழி
போயேறு சிலைபெறி யருளேறு பாவினாற்
புனலேறு கரையேறியும்
தெருளேறு மொருகோடி விளையாடல் செயவேறு
தெய்வத்தி னுலாகுமோ
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 3.

வாடாத பாவலரி னொண்டமிழ்ப் பாவலர்கள்
வண்டாக வுண்டுமகிழும்
வற்றாத நிஞ்சுவைச் செந்தேற லேமாரன்
வளையாத பூங்கரும்பே
ஈடாக வொன்றின்றி நெஞ்சினிற் றண்டாம
லெழுகின்ற மணிவிளக்கே
எழுமையுந் தொடர்கின்ற முழுவலித் துணையே
யிறங்காத கலைமதியமே
ஓடாத நிதியமே தோளாத முத்தமே
யுவராத சுவையமுதமே
ஊதாத செம்பொனே யெழுதாத வடிவமே
யுரையாத யர்ந்தமணியே
தேடாத வஞ்சரைச் சேராத செல்வியே
திருவருள் கொடுத்தாளுவாய்
தென்பொதிய மயிலையுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 4.

வாராத சித்திவரு விக்கின்ற தெய்வமுயிர்
வாக்கினி னிறைந்ததெய்வம்
சீரான வேங்கடந் தென்குமரி யாயிடைத்
தேயமர சாண்டதெய்வம்
தென்னவன் முதலாய முடிமன்னர் மூவருஞ்
சேவித்து நின்றதெய்வம்
பாராத சித்திரம் தமிழ்மறைத் தெய்வமென்
பார்வைக்கு ணின்றதெய்வம்
பார்க்கத் தெவிட்டாத வழகுடைய தெய்வமுயர்
பாவலர்க் குதவுதெய்வம்
தீராத நோய்களைத் தீர்க்கின்ற தெய்வமென்
சிறுமையை யழித்ததெய்வம்
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 5.

பாணினும் யாழினு மினிக்குமை வகையிபற்
பசுவிற் கறந்ததிம்பால்
பரவுபங் கயமிரண் டொருநாளு காந்தள்விரி
பைந்தருவின் வருமுக்கனி
காணினுங் கேட்பினும் மதுரிக்கு மிருவிழிக்
கன்னலிலெ மூந்தசெந்தேன்
கற்றவர்க ளுவினிற் பொதிசோறு தந்தமது
கைக்கெட்ட வேயிருக்க
வீணிலிம் மானுடர் கொடும்பசிக் குணவாக
விடமருந் தாவதுபோல
வேறுமொழி யுணவுகொண் டழிகின்ற மதியின்மை
விதிவன்மை யன்றியுண்டோ
சேணிலுங் காணாத வெண்கமல நிதியமே
சிந்தாம ணிக்குவியலே
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 6.

அம்புலி யடைந்தவுட னம்மாவெ னக்கூவ
வறிவித்த தெய்வமும்நீ
அமுதுவா யுண்ணவதி மதுரமொழி செவியுண்ண
வாதரித் திடுமன்னைநீ
இன்புவிளை யும்பசுங் குதலைமொழி பெற்றவர்க்
கீவித்த செவிலியும்நீ
ஏடுகைத் தந்தளக் கண்ணைத் திறந்தெழுத்
தறிவித்த விறைவனும்நீ
நம்புங் கருத்தைப் பிறர்க்கறி வுறுத்தவென்
நாவினுறை தூதவும்நீ
நல்லுயிர்த் துணைவனீ பிரியாத தோழனீ
நன்மனைவி மக்களும்நீ
செம்பொனருள் செல்விநீ யுனைமறந் திட்டவத்
தீயற்கு முய்தியுண்டோ
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 7.

கண்டெழுந் திருநாங் கூப்பித் தலைக்குமேற்
காட்டியஞ் சலிசெய்குவார்
கடவுளை யிப்போது பேசுபது முங்களது
கதையென்று கண்ணீர்விடுவார்
தெண்டனிடு வாரிங்கு வந்தகா ரியமேது
தெரிவிக்க வேண்டுமென்பார்
சிறிதுபொரு ளுதவியென் றடியெடுத் திடுமுனத்
திருமுகங் கருமுகமதாய்
விண்டவாய் கூம்பக் கழுத்துநச் சரித்தொரிரு
விழிசெருகி நாக்குவீழ்ந்து
விக்குளெழ மரணவே தனையுறும் வச்சையர்கள்
வீட்டிலே பொருளிரக்கச்
சென்றிடா வாமுமுன் திருவடிச் சேவையுஞ்
சிறியனுக் கருளுகண்டாய்
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 8.

இல்லாமை யால்வந்த மிடியினால் மிகநொந்தி
ரக்கத்து ணிந்துமானம்
ஏகாது பின்தள்ள வாற்றாமை முன்தள்ள
விடையூச லாடியாடிப்
பல்லாயி ரந்தரங் காட்டியும் நாவினாற்
பயிலாத மொழிபயின்றும்
பணியாத பேரைப் பணிந்துமுன் திறவாத
படலைபல பலதிறந்தும்
பொல்லாத வஞ்சரைப் பாடியும் புகல்கின்ற
பொய்ம்மைமொழி செவிமடுத்தும்
போற்றமுன் பெருமைபறி போகவிட் டென்மனம்
புண்பட்ட வாறுபோதும்
செல்லாத செல்வமும் திருமுடிச் சேவையுஞ்
சிறியனுக் கருளுகண்டாய்
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 9.

என்மனக் கவலைமுழு வதுமொழியு மாறுநீ
சேடனை யிரக்கிகொளினும்
என்பெற்ற வன்னையுன் பொன்பெற்ற விருசெவி
யிடங்கொள்ளு மோவறிகிலேன்
நன்மனத் தாலறிந் தருள்புரிவை யென்றிந்த
நாட்களெல் லாங்கழித்தே
நாளிலவு காத்திட்ட கிளியான தன்றிப்போர்
நயமில்லை நல்குரவினும்
புன்மையும் நோயுங்கெ டுத்துயிர்க் குற்றமும்
போக்கியினி யருள்புரிகுவாய்
பொல்லாத பிள்ளையென் றென்னைப் புறந்தரப்
போகாது பொறையுனக்கே
சின்மய சொரூபியே யானந்த வெள்ளமே
சிந்தாம ணிக்குவியலே
தென்பொதிய மலையிலுறை கும்பமுனி மடியில்வளர்
செந்தமிழ்க் குலதெய்வமே. 10.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6-ம் பத்து, 10-ம் தசகம்.

[570-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பாசுரம்

எந்நா ளோநாம் மண்ணளந்த
இணைத்தா மரைகள் காண்பதற்கென்
றெந்நா ளும்நின் றிமையோர்க
ளேத்தி யிறைஞ்சி யினமினமாய்
மெய்ந்நா மனத்தால் வழிபாடு
செய்யும் திருவேங் கடத்தானே
மெய்ந்நா னெய்தி யெந்நாளுன்
னடிக்க ளடியேன் மேவுவதே.

உரை:— நான்காம் அடி— மெய் - மெய்யாக, எந் நாள் - எந்தக்காலத்தில், உன் - உன்னுடைய, அடிகள் - திருவடிகளிடத்தில், அடியேன்-ஆசைப்பட்டுக் கிடக்கும் தாஸனுன நான், எய்தி - அடைந்து, மேவுவது-பொருந்துவது - அதாவது நிரந்தரமாகச் சேர்ந்து தாஸ பணிவிடை செய்வது. முதலடியில் எந்நாளோ - எந்தக் காலத்தில் ஏற்படுமென்று கேட்கிறபடி. திருவேங்கடத்தானே - திருவேங்கடத்தில் கோவில் கொண்டு நித்தியவாஸம்செய்பவனே!

விசேஷக் குறிப்பு:—இம் மாட்சிமைதங்கிய ஆழ்வார் ஒருவூரிலெழுந்தருளியிருக்கின்ற அர்ச்சாவதார மூர்த்தியைப் பாடினால் அப்பொழுது அங்கு அந்த ஸந்நிதிக்கேகித் தரிசனம்பெற்றதாக எண்ணலாகாது. இப்படிஎல்லாமூர்த்திகளும் தங்கள்தங்கள்ஸர்வவிபவங்களுடனும் ஆழ்வார் மனக் கண்களுக்கு ஸேவை ஸாதித்தார்களேயன்றி அங்கு ஆழ்வார் போகவில்லையென்பதுதான் பாசுரங்களால் தெரியவருகிறது; இதுகமும்அப்படியே. இப்போது ஆழ்வாரின் அபேக்ஷை மனவினால் அநுபவித்தல் மாத்திரமன்றி "மெய்" யாகவே தம் தேஹேந்திரியங்களால் செய்யக்கூடிய பணிவிடை புரியவேண்டுமென்பதாயின், ஆழ்வார் தம் தேஹத்தோடு திருவேங்கடஞ்சென்றால் அந்த அபேக்ஷை நிறைவேறுமன்றோ? இம்மஹானுக்கோ தாம் ஏகுவது இயல்பல்ல. பின்னர் என்ன நோக்கமென்றால், முதலில் இந்தப் பிருகிருதிசரீரத்தைப் பகவானின் அருளால் தொலைத்து, வேறு பிருகிருதி கலப்பில்லாத தேஜோமயமான ஸுஷ்மசரீரம் அருளப்பெற்று அச்சரீரம் ஸகலவித பணிவிடைக்கும் உபயோகமாவதால் அச்சரீர தசையில் வைகுண்ட வானவரோடு கூட்டுச் சேர்ந்து திருமலைக்கு யாத்திரை வந்து தாம்

உகந்த பணிசெய்ய ஆசைப்படுகிறார். மற்றபடி, ஆறுயிரப்படி உரை உண்மைப் பொருளை விளக்குவதால் அதை யெடுத்து எழுதுவோம். "வைகுந்தத்திலிருக்கும் ஸ்ரீமந்நாராயணனுக்கு ஸர்வவித கைங்கர்யமும் பண்ணுகையன்றோ உரித்தென்னில் அங்குள்ள அமரர்களுங்கூடித் திருவேங்கடமுடையான் திருவடிகளையன்றோ நாங்கள் காண்பதென்று ஆசைப்பட்டு இங்கே இனமினமாக வந்து உன்னுடைய திருவடிகளிலன்றோ வாக்கு மனசு காயங்களாலே ஸர்வகாலமும் ஸர்வ தாஸவிருத்தியும் பண்ணுகிறது. அடியேனுக்கு மிதுவே அபேக்ஷை ஆகையால் திருமலையிலே செல்லவேணும். எனக்குத் தக்கதாக நான் மெய்யாகத் திருமலையிலேவந்து உன் திருவடிகளிலே ஸர்வகாலமும் ஸர்வ அவயவங்களாலும் ஸர்வ சேஷவிருத்தியும் பண்ணுவதென்றோ வென்கிறார்—ஆறுயிரப்படி. ஈட்டிலும் "எங்ஙனே யென்று சந்தேஹிக்கிறதென்! அஃதொரு தேசவிசேஷத்திலேயிவஸ்திதமன்றோவென்ன, அங்குள்ளாரு மிங்கே வந்தன்றோ வுன்னைப் பெற்று அநுபவிக்கிறதென்கிறார்" என்று அவதாரிகை வைத்திருப்ப தறியத் தக்கது.

7-ம் பாசுரம்.

அடியேன் மேவி யமர்கின்ற
வமுதே யிமையோ ரதிபதியே
கொடியா வடுபுள் ளுடையானே
கோலக் கனிவாய்ப் பெருமானே
செடியார் வினைகள் தீர்மருந்தே
திருவேங் கடத்தெம் பெருமானே
நொடியார் பொழுது முன்பாதங்
காண நோலா தாற்றேனே.

அவதாரிகை:—ஆழ்வார் மோக்ஷஸாதனமான ஓர் உபாயத்தை அநுஷ்டித்தாலல்லது எவ்வளவு அநுபவப் பிரியராயும் அந்தரங்கராயும் இருந்தாலும் எம்பெருமான் தாம் ஏற்படுத்தியுள்ள நியதியை மாற்ற அபிப்பிராயப்படாமையாலும், இவர் வேண்டிக்கொண்டபடி இனி ஒரு சுலபமான புது உபாயத்தை இவர்நிமித்தம் கல்பிக்கக் காணாமையாலும், அவனைச் சேர்ந்து ஆநந்தாநுபவம் உடனே தமக்கு வாய்க்க வேணுமென்ற தீவிரமான வேட்கை ஆழ்வாரைத் தூண்ட, தாமும் நோன்பு நோற்பதாக (உபாயமநுஷ்டிப்பதாக) தீர்மானித்து அத்தீர்மானத்தைப் பகவானுக்கு அறிவித்து அருள்புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றார்.

பதவுரை:—அடியேன் - தாஸனான யான், மேவி - வெகு சிநேகத்தோடு கிட்டி, அமர்கின்ற - ஆதரவோடும் அதிசயத்தோடு மநுபவிக்கும், அமுதே - திகட்டாத இன்பமே, இமையோர் அதிபதியே - முக்தர்களுக்கு நிர்வாஹகனே, அடு - பக்தர்கள் பாவங்களை நசிப்பிக்கும், புள் - (பறவை) கருடனை, கொடியா உடையானே - த்வஜமாகவுடையவனே, கோல-அழகான, கனிவாய் - கோவைப்பழம் போன்ற உதடுகளையுடைய, பெருமானே-அளவில்லாத ஆநந்தத்தைப் பக்தர்களுக்குப் பிரஸாதமாகக்கொடுப்பவனே, செடிஆர் - காடு வளர்ந்தாப்போல் அநந்தமாய் வளர்ந்துள்ள, வினைகள் - பாவங்களை, தீர்மருந்தே - தீர்க்கும் ஔஷதமே. திருவேங்கடத்து எம்பெருமானே, நொடியார் பொழுதும் - கை விரல்களால் சொடுக்குமுன்பே-அதாவது வொரு க்ஷணத்திலே, உன் பாதங் காண - உம் திருவடிகளைச்சேர, நோலாது-நோன்பு செய்யாமல் (ஓர் உபாயாநுஷ்டானம் செய்யாமல்) ஆற்றேன்-ஆற்றி யிருக்கமாட்டேன்.

கருத்து:—உன்னைக் காணாது ஸஹிக்கமாட்டேன், உன்னைக் காட்டிக்கொடு வென்கிறபடி.

8-ம் பாசுரம்

நோலா தாற்றே னுன்பாதங்
காண வென்று நுண்ணுணர்வில்
நீலார் கண்டத் தம்மானும்
நிறைநான் முகனு மிந்திரனுஞ்
சேலேய் கண்ணார் பலர்சூழ
விரும்புந் திருவேங் கடத்தானே
மாலாய் மயக்கி யடியேன்பால்
வந்தாய் போலே வாராயே.

விசேஷக் குறிப்பு:—நான்காமடியில் "வந்தாய்போல வாராயே" என்பது ஏதோ ஒருகால விசேஷத்தில் இவ்வாழ்வார் கலவைநிமித்தம் மெய்யாகக் காணும்படி எம்பெருமான் எழுந்தருளியதாகத் தோற்றுகிறது. இவ்வண்ணம் நேரிட்டதில்லை. ஆனால் ஆழ்வார் அபேக்ஷை "ஸர்வகாலமும் நானுன்னைக் காணும்படி நீ வருகை வேண்டும்" என்பது. ஆகையால், "வந்தாய் போல வாராதாய்" என்பது பகவானுக்கு இவர் தற்போது செய்யும் விண்ணப்பம். எப்போதும் நான் உன்னைக் காணும்படி உனக்குத் திருவுள்ளமில்லையாயின் கஜேந்திர ஆழ்வானுக்கு இடர் தீர்க்க ஒருகால் க்ஷண காலம் வந்தாற்போல் வாவென்கிறார். ஏன் இவ்விண்ணப்பம் செய்கை வேண்டுமென்றால், நான் உன்னைக் காணப் பெறாத வியஸநத்தால் பித்தேறி மயங்கியிருக்கிறேன், ஆகையால் அடியேன்பால் "வாராய்", என்று அழைக்கிறபடி—

நோலாது ஆற்றேன் - உபாயாநுஷ்டானங்களை (நோன்பு) இயற்றாமல் ஆற்றியிருக்கமாட்டேனென்று "அம்மானும் நான்முகனும் இந்திரனும் மூவரும் ஒவ்வொருவராய் விண்ணப்பம் செய்பவரானபடியால் "ஆற்றோம்" என்று பன்மையில் கூறாமல் ஒருமையில் தனித்தனியே பேசுகிறபடி. இவர்கள் பகவானைக் காண நோன்பு ஒன்று மியற்றாமல் அவரவர் பத்நிகள் ஸமேதராய்ப் பகவானிடத்தில், உன்னைவிட் டகலமாட்டோம் என்று வற்புறுத்தி ஸேவையடைகிறார்கள்-அடியேனுக்கோ காணப்பாக்கியமில்லையென்று ஒருவாறு வாது கூறுகிறபடி - அதிகாரிகள் விஷயத்தில் பகவானின் கிருபையும் கருணையும் இங்ஙனே யல்லவோ இருப்பதென்ற விஸ்மயமுங் கூட. இங்கு ஆறுயிரப்படி உரைவெகு விசதமாயிருப்பதால் எடுத்தெழுதத் தக்கது:—

"மோக்ஷமடைய ஏற்படுத்தப்பட்ட உபாயாநுஷ்டானமில்லாதவர்கள் பகவானைக் காணவேண்டுமென்று ஆசைப்பட்டால் கிடைக்குமோவென்னில், அறிவுடையரான சங்கரபகவானும் நான்முகனுமிந்திரனும் மற்றமுள்ள தேவர்களுங்கூட அவரவர் பரிவாரங்களுடன் வந்து நாங்கள் உபாயமேற்று நோன்பு நோற்காதவரானாலும் உன்னைக் காணாதொழியில் தரிக்கமாட்டோமென்றாசைப்பட்டன்றோ உன்னைக்காணப் பெறுகிறது. ஆதலாலடியேனுமுன்னை ஸர்வகாலமும் காணவேணுமென் றபேக்ஷிக்க வப்பொழுதேயெழுந்தருளவிட்டவாறே இப்படிச்செய்கைக்குத் திருவுள்ளமன்றாகில் உன்னைக் காணப்பெறாத வியஸநத்தாலே பித்தேறி மயங்கியிருந்த வடியேன்பால் ஸ்ரீ கஜேந்திராழ்வானுக்கு வந்து தோன்றினாற்போலே யாகிலும் வந்தென்னை நிலைபெறச் செய்தருளா யென்கிறார்."

இரவீந்திரநாதர் கட்டுரைகள்

தபோவனம்

[574-வது பக்கத் தொடர்ச்சி]

தேசீயக்கல்வி என்பது ஐரோப்பியர்களுக்கு என்ன பொருள்படுமோ அதே பொருளை இப்பாரத நாட்டிலும் குறிக்கும் என்று கொள்வது பிழை. ஒரு தேசத்தின் புராதன பாரம்பர்யக் கொள்கைகளாலும் ஜாதிச் சடங்குகளாலும் கட்டப்பட்டிருக்கும் நான் என்ற ஆணவத்தைப் பலப்படுத்தி நாட்டுகின்ற கல்வியைத் தேசியக்கல்வியென்று ஏற்றுக்கொள்ள என்றால் ஒருபோதும் இயலாது. எல்லாவற்றிலும் ஜாதிஅபிமானமே பரமபதார்த்தமாக எண்ணி நாம் அதனை ஆராதிக்கவில்லை. நம்முடைய ஜாதிஅபிமானம் எல்லாம் "பூமைவ சுகம் நால்பே சுகமஸ்தி." "பூமா து ஏவ விஜிஜ்ஞாஸித வ்ய:" என்னும் வாக்கியங்களில் அடங்கியிருக்கின்றது. இதுவே நமது ஜாதிக்கு அடுத்த மந்திரம்.

பண்டைய பாரத நாட்டுத் தபோவனத்தில், மிகப் பெரிய சாதனையின் தேவதையாகிய வனஸ்பதி ஒரு நாள் தன் சிரத்தை மிக உயர்த்தி நின்றது. அப்போது மனித சமூகத்தின் எல்லாப் பாகங்களும் அதன் கிளைகளால் கவிந்துகொண்ட அதிகாரத்துள் அடங்கின. இதனால் எல்லாரிடத்தும் ஒற்றுமை ஏற்பட்டது. இவ்வொற்றுமையே நமது ஜாதிக்கடுத்த சாதனையாகும். உடலையேனு மனதையேனும் பலப்படுத்துவதற்காகச் செய்யப்படும் அப்பியாசங்கள் அல்ல இந்தச்சாதனை. இது ஒற்றுமையின் சாதனையே. ஏனைய பிராணிகளை அடக்கி, நான் என்னும் ஆணவம் பலமுடன் மேலே எழும்படி செய்யவேண்டுமென்பது நம்முடைய இலக்ஷியமல்ல; ஒற்றுமையின் மூலமாகப் பரிபூரணத்தை அடைவதே பரமபலனாகும் என்றுகொண்டவர் பண்டைய இப்பாரதநாட்டவர். பணத்தைத்தேடிச் சேர்த்துவைப்பதின்றி ஆன்மசக்தியை அடைவதே உண்மையான பலன் என்று கைக்கொண்டவர் இவர்.

மிகப் பழைய காலத்தில் ஒரு நாள் அரணியங்கள் தழைத்திருந்த இப்பாரதநாட்டில் நமது ஆரிய தொல்குல முன்னையோர் பிரவேசித்தனர். பிற்காலச் சரித்திரத்திலும் இவ்வண்ணமே, ஐரோப்பியர் புதிது கண்டுபிடிக்கப்பட்ட பெரிய அமெரிக்காகண்டத்தின் காடுகளுக்குள்ளே வழிசெய்துகொண்டு நுழையலாயினர். நுழைந்த அவ்வீரர்கள் முன் அறியாத பூமியின் அப்பாகத்தைப் பின்வரும் தம் சந்ததியினர்க்குப் பயன்படும்பொருட்டு அப்பாதை எளியதாகும்படி உற்சாகத்துடன் செய்துவைத்தனர். நம்முடைய தேசத்தில் இத்தகைய வழிகாட்டிகளாக இருந்தவர் அகத்தியர் போன்ற முனிவர்கள். இவர் தூரத்திலிருந்து முன் அறியாத இடங்களுக்கு வந்து அங்குள்ள தடைகளை நீக்கி அடர்ந்த அரணியங்களை மனிதர் வசிப்பதற்கு உபயோகமாகும்படி செய்து வைத்தனர். இவ்வகை இப் பாரதநாட்டில் பரவிய ஆரியர்கள் இங்குள்ள பண்டைய குடிசனங்களுடன் போர்கள்பல செய்யவேண்டி நேர்ந்தது. மூன்று நான்கு நூற்றாண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர்களும் அங்கிருந்த புராதனசனங்களுடன் சண்டைசெய்தனர். இப்படி இவ்விரண்டு சரித்திரங்களும் ஒரே நிலைமையிலிருந்து உற்பத்தியானபோதிலும், அவை ஒரே சமுத்திரத்தைச் சென்று சேரவில்லை.

அமெரிக்காவின் காடுகளில்புகுந்த ஐரோப்பியர் முயன்ற முயற்சிகளின் பலனாக அவ்வனங்களின் இடையே பெரிய பெரிய பட்டினங்கள் இந்திரஜாலம் போலத் தோன்றின. இப் பாரதநாட்டிலும் இவ்விதமே பட்டினங்கள் எழுந்ததுண்டு. ஆயினும் இவ்வாரியர், பட்டினத்தின் ஒரு அங்கமாகவே அரணியத்தை எக்காலத்திலும் பற்றிக்கொண்டிருந்தனரே அன்றி அரணியங்களை அழித்துவிடவில்லை. இவ்வண்ணம் இப் பாரதநாட்டில் அரணியம் தன் பரிபூரணத்தை அடைந்தது. அமரிக்காவில் இன்னும் சில காடுகள் அழிக்கப்படாமல் இருக்கின்றனவென்றால் அவை மனிதனது சிற்றின்ப போகஸ்த்தானங்களாக விடப்பட்டிருக்கின்றனவேயன்றி யோகத்திற்குரிய ஆசிரமங்களாக அமைந்திருக்கவில்லை. பிரபஞ்சப் பெருமையை அறிவதற்கு ஏற்ற புண்ணியஸ்தலங்களாக அமெரிக்கர் தம் அரணியங்களைக் கருதுகின்றார் அல்லர். மனிதனுடைய சிரேஷ்டமான அந்தரங்கப்பிரகிருதியுடன் அரணிய பிரகிருதியின் பரிசுத்தமான ஐக்கியம் அங்கு ஸ்தாபிக்கப்படவில்லை. புதிய அமெரிக்கா தனது பெருமை யொன்றையும் அரணியத்திற்கு அளிக்கவில்லை; அரணியமும் அதற்குத்தன் பெருமையை வெளிப்படுத்தவில்லை. புதிய அமெரிக்கா, புராதனவாசிகளை அழித்துவிட்டதேயலாமல் அவர்களைத் தன்னுடன் ஒற்றுமையாக்கிக் கொள்ளவில்லை. அரணியங்களைத் தன்னுடைய நாகரிகத்திற்கு அயலாகத் தள்ளி வைத்திருக்கின்றதேயன்றித் தன்னுடன் அவைகளைச் சேர்த்துக் கொள்ளவில்லை. பட்டினங்களும் நகரங்களுமே அமரிக்க நாகரிகத்தில் வெளிப்படையாக இருக்கின்றன. இவைகளை உண்டாக்கிக்கொண்டதன் மூலமாக அவர்கள் தங்களுடைய சுயவலிமையின் பிரவாகத்தையே பிரசித்தம் செய்தார்கள். இப் பாரதநாட்டின் நாகரிகத்திலோ பிரதானமான ஸ்தலமாக விருந்தது தபோவனம். மனிதன் இங்கு வனத்தின் மத்தியில், நிலவும் பிரகிருதியுடன் தன் ஆன்மாவின் ஒற்றுமையைச் சாந்தமான வகையில் அடைந்துகொண்டான்.

இந்தச்சாதனை இப் பாரதநாட்டில் மட்டுமே நிறைவேறியதென்று நான் பெருமிதம் பேசிப் பிரசித்தம் செய்வதாக எண்ணவேண்டா. மனிதசக்திக்கு எல்லை இல்லை என்ற சத்தியத்தையே பிரசுரம் செய்ய நான் விரும்புகின்றேன். பனைமரத்தைப்போல் ஒரே பார்வையுடன் ஆகாயத்தைநோக்கிச் செல்வதின்றி ஆலமரத்தைப்போலத் தனது கிளைகளை நாற்றிசையினும் பரப்பித் தன்னை விசாலமாக்கிக்கொள்கின்றது இப் பாரதநாடு. கிளை எப்பக்கம் வளர்கின்றதோ அப்பக்கமே அதனை வளரவிடுவதாற்றான் ஆலமரம் பரிபூரணமடைகின்றது. அதனால் கிளைகள் அனைத்தும் மங்களம் அடைகின்றன.

மனிதசரித்திரம் ஆன்மசரித்திரமாகவே இருக்கின்றது; பிராணசக்தியின் மூலமாக வளர்கின்றது. அது இரும்பையும் பித்தளையையும் போல உருக்கி ஒரு அச்சில் வார்க்கக்கூடியதன்று. சந்தையில்,ஒரு விசேஷகாலத்தில் ஏதோ ஒரு நாகரிகத்தின் விலை ஏறியிருக்கின்றதென்று சொல்லி, அந்த அச்சிலேயே எல்லாச்சாதியினரையும்வூற்றிவைக்கின்றமூடத்தனத்தைக் கௌரவப்படுத்துவதோ முற்றிலும் வீணான எண்ணமாம். கால்கள் சிறுத்திருப்பது அழகென்றும் உயர்குலத்திற்கு அடையாளம் என்றும் கருதி அதற்குக் கொடுமைசெய்து ஒடுக்கிக்கொண்ட சீனப்பெண்கள் தம் கால்களை விகாரமாக்கிக்கொண்டனர். அந்தப்படியே, இந்தப் பாரதநாட்டிலும் ஐரோப்பிய பாவனைகளை விரைவில் நிலைநிறுத்தவேண்டும் என்று முயல்வதால், இயற்கையான ஐரோப்பிய பாவனைகள் ஏற்படாமலிப் பாரதநாடு விரூபமாகத் தோன்றநேர்வதே நிச்சயம்.

ஒரு தேயத்தாருடன் மற்றொரு தேயத்தாருக்கு ஏற்படும் சம்பந்தமானது வியாபார சம்பந்தமே யொழிய உள்ளத்தோடு இணங்கியவொரு சம்பந்தம் ஆகமாட்டாது. நமக்கு அவசியமில்லாத பொருள்கள் மட்டுமே அயல்நாட்டவர்களிடத்தில் இருக்குமானால் நாம் அவர்களுடன் வியாபாரம் செய்தல் முடியாது. அப்படியானால் நாம் அவர்களுக்குப் பிரயோஜனமற்றவர்களாகக் காணப்படுவோம். பாரதநாடு தனக்கு உரிய சுய ரூபத்தை அடையாவிட்டால் பிறருடைய வேலைச் சாலைகளில் கூலிக்காரச் சாதியார்களாகவே தோன்றுவோம். அப்பொழுது பாரதநாடு தன் பெருமையையும் இன்பத்தையும் இழந்துவிடும்.

இக்காலத்தில் இன்னதோர் நிலையில் இப்பாரதநாடு இருப்பதால் அது எத்தகைய சக்தியைக் கொண்டு தனது உள்ளீடான பலத்தை அடைந்துகொள்ளக் கூடும் என்பதை அறிய வேண்டியது அவசியம். அச்சக்தி வியாபார சக்தியன்று, சுயராச்சியம் செய்கின்ற சக்தியன்று, சுதேச அபிமானமும் அன்று; மற்று, விச்வத்தை அறிந்துகொள்ளும் அறிவே அச்சக்தியாம். அச்சக்தி பாரதநாட்டின் தபோவனத்தில் சாதிக்கப்பெற்றது; உபநிடதத்தில் உச்சரிக்கப்பெற்றது, கீதையில் உபதேசிக்கப்பெற்றது. பகவான்புத்தர், அச்சக்தியின் சத்தியத்தைச்சகலசனங்களும் தம்தினசரி ஒழுக்கத்தில்கொண்டுவரும்படி தபசுசெய்தார். எத்தனையோவகை துக்கங்களுக்கிடையிலும்பிரிவினைகளுக்கிடையிலும் கபீர் நானக் அனைய இந்நாட்டு மகாபுருடர்கள் அச்சத்திய சக்தியையே எடுத்துப்பேசினார்கள்.

ஞானத்தில் அத்துவைதநிலையும், சிந்தையில்விச்வமயமானநினைவும், கர்மத்தில் போகசாதனையும் இப் பாரதநாட்டின் சத்தியமும் சக்தியுமாயமைந்திருந்தன. இவ்வண்ணம் இப்பாரதநாட்டின் அந்தரங்கத்தின் மத்தியில் வாசஞ்செய்யும் உதார சீலமுடைய இத்தபசானது, இந்துக்கள் முஸல்மன்கள் ஐரோப்பியர்கள் யாவரையும் ஒற்றுமைப்படுத்துவதற்கு இன்று காத்திருக்கின்றது. இவ்வொற்றுமை அடிமையைப்போன்றும் உணர்ச்சியற்றசராசரங்களைப்போன்றும் அல்லாமல் ஆவிக்கு அடுத்தவொரு சாதனையாகும். இத்தகைய ஒற்றுமை கைகூடும்வரையில், நாம் துக்கமுடையவர்களாகவே இருப்போம்; அவமானங்களைச் சகிக்கவேண்டும், எத்திசையினும் நாம் செய்யும்முயற்சிகள் மீண்டும்மீண்டும் வீணாகவேமுடியவேண்டும். பிரமசரியமும்பிரமஞானமும் சர்வஜீவ தயையும் முன்காலத்தில் இப் பாரதநாட்டின்கண், வெறும் பாடல்களாகவும் வீண் கூத்துக்களாகவும் வாய்வலிக்க வாதிக்கும் தர்க்கவிஷயங்களாகவும் இருந்ததில்லை. உண்மையாக இவை ஒவ்வொரு ஆன்மாவிற்குள்ளும் நிலைத்திருக்கும் வகையே படித்திருந்தனர். இன்றைக்கு நாம் அவைகளை மறந்துபோகாமல் நமதுசிட்சைதீக்ஷைகளின் முறைப்படிஅப்படிப்பனைகளை ஊட்டுவோமேயானால், நமது ஆன்மா விச்வப்ருகிருதியின்கண் தனக்குரிய சுயாதீனத்தை யடையும்; அடைந்த அந்தச் சுயாதீனத்தைச் சமூகக்கொள்கைகளின் கட்டுப்பாடுகளினால் இழக்கவும் மாட்டோம்.

பலாத்காரத்தின் இடையே சம்பூரணத்தின் ஆதாரம் இல்லை. பூரணத்தின் சமநிலையை நஷ்டப்படுத்தி இப்பலாத்காரம் தன்னையே தனிமையாகக் காட்டுவதனாற்றான், அதனை நாம் பெரிதாக எண்ணுகின்றோம். மற்று, உண்மையில் அது மிகவும் அற்பமானது. பாரதநாடு இத்தகைய பலாத்காரத்தை விரும்பாமல் பரிபூரணத்தையே விரும்பியிருந்தது. இந்தப் பரிபூரணம் நிகிலத்துடன் ஐக்கியப்பட்டது; இவ்வைக்கியம் அகங்காரத்தை ஒழித்துத் தாழ்மையே பூண்டது; இந்தத் தாழ்மையே ஆன்மசக்தியாம். இது பலவீனரிடத்தில் காணப்படுவதில்லை. எவ்விடத்தும்பரவி அமைதியுடன் இருக்கின்றவாயுவே நித்தியமானது. இத்தகைய சாந்தத்தினால்வியாபித்திருக்கின்ற வாயுவின் சக்தியானது கடுங்காற்றினும் மேலானதாக இருக்கின்றது. கடுங்காற்றோ என்றென்றைக்கும் நிலையானதன்று. ஓர் குறித்த இடத்தைச் சிறிதுகாலமே கலக்கடிக்கவல்லது கடுங்காற்று. மற்று, சாந்தமான வாயுவின் பிரவாகமோ உலகமனைத்தையும் நித்தியமாகத்தழுவிநின்று ஆனந்திக்கச் செய்கின்றது. வேண்டிய மனத்தாழ்மை யாரிடத்துப் பிரகாசிக்கின்றதோ, துறவின் முறையினால் யாருடைய சக்தி பிரத்தியக்ஷமடைந்திருக்கின்றதோ அவர்களே தடையின்றி அனைத்துடனும் ஒற்றுமைப்பட்டு அனைத்தையும் அனுபவிக்கக்கூடும். அத்தகைய தாழ்மையுடையவன் யாரையும் புறத்தே தள்ளிவைக்கமாட்டான், பிரித்து வைக்கமாட்டான். தன்னையே மறந்து அனைவரையும் தன்னைப்போலவே பாராட்டுவான். இதனாற்றான், "சாந்த குணமுள்ளவர்களே பாக்கியவான்கள், ஏனெனில் அவர்களே பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்" என்று பகவான் இயேசுகிறிஸ்துநாதர் கூறினார்.

முற்றிற்று.

அப்பர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[522-வது பக்கத் தொடர்ச்சி]

5. இராவணன் போக்கும் தேவார நோக்கும்

தேவாரத்தில் பல அடியார்களின் பெயர்கள் ஆங்காங்கு மொழியப்பட்டுள்ளன. பலர் அவற்றுள் ஒரு தடவையே மொழியப்பட்டனர். சிலர் இரண்டு மூன்று தடவை குறிக்கப்பட்டுள்ளார். மற்றுஞ் சிலர் பல்முறை கூறப்பட்டிருக்கின்றனர். (நம்பிநந்தி) நமிநந்தியடிகள் அப்பர்தேவாரத்தில் ஒரு செய்யுளிலேயே வைத்துப் பாடப்பட்டார். அப்பூதியடிகளும் அவ்வாறே ஓரேஇடத்தில் வரக்காண்கின்றோம். சண்டேஸ்வர நாயனாரை அப்பர் தம்தேவாரத்தில் சிலபதிகங்களில்வியந்து பாடக் காண்கின்றோம். மார்க்கண்டேயரும்அவ்வாறே யாகும். செங்கணார்-சிலந்தி, இந்திரன், அகத்தியன் முதலிய முனிவர், பிரமன், மால் முதலானோர், சிவபக்தியும் சிவ பூசையும் கூறப்பட்டிருக்கின்றன. ஆயினும் அப்பர் தேவாரத்தில் சுமார் இருநூறு பதிகங்களில் இராவணனைப்பற்றித் திருக்கடைக்காப்பு முதலிய இடங்களில் பாடப்பட்டிருப்பது காணலாம். அவ்வாறு அத்துணை தடவைகளில் கூறியதே கூறுவதுபோல் இராவணனைப்பற்றிப் பாடுவானேனென்பது ஆராய்ச்சியுள் புகுகின்ற தமிழ்மாணவர்களுக்கு எழும் சாதாரண சங்கையாகும்.

அப்பர் இழித்துக்கூறிய கொடுஞ்செயலாளர்களில் இழிவுசிறப்பாய் எடுத்துக் காட்டக்கூடியவன் இராவணனா என்று ஆராயப்புகின், அவ்வாறு மொழிய ஆதாரவுகள் காணப்படவில்லை. திரிபுரங்களினும் கொடியவன் இராவணனென்னலாகாது. சூரபதுமன், தக்கன், இயமன், மன்மதன் முதலானோர் பெருங்குற்றங்கள் செய்தவர்களே. அவர்களை ஏகதேசத்தில் சில பதிகங்களில் குறிப்பிட்டு, இராவணனை மாத்திரம் ஒருபிடியாய்ப் பிடித்ததுபோல் பத்தாஞ்செய்யுளிலப்பர் காட்டுவது யாது காரணம்?

இவர் மாத்திரம் இவ்வாறு செய்யவில்லை. திருஞானசம்பந்தரும் தாம்பாடியபதிகங்களில் 8-ம் செய்யுளில் இராவணனைப்பற்றி இகழ்ந்து பாடுவதை நாம் காண்கின்றோமன்றோ? ஆதலால், இராவணன் திருக்கயிலாயத்தை அடைந்து அதையெடுத்து அப்புறம் எறிய எத்தனித்தது சம்பந்தர் தேவாரத்தில் சுமார் நானூறு செய்யுளுக்கும் அப்பரில் சற்றேறக்குறைய முன்னூறு செய்யுளுக்கும் விஷயமாய் நிற்பதுமிகவும் ஆச்சரியமான விஷயமன்றோ? இராமாயணக்கதை முழுவதும் பங்கிட்டு ஒவ்வொருபாகம் இச்சமயகுரவர்கள் ஆங்காங்குப் பாடினரெனச் சொல்லவும் இடமில்லை. இராவணன் கைலாயத்தை யெடுத்துச் சிதைப்புண்டு பின்னர் அருள்பெற்ற உத்தரகாண்ட பாகமே அவற்றில் வற்புறுத்தப்படுகின்றது.* அது அத்துணைப் பெரிய விஷயமாவென்பது ஆராய்வோம்:—

திருநாவுக்கரசு,இராவணனைச் சிவபெருமான் கைலாயத்தில் அடர்த்த பெருமை பாடுங் காரணம் பின்வருமாறு சேக்கிழார் விளக்குகின்றார். திருவதிகையில் அப்பர் "கூற்றாயினவாறு" என்னும் திருப்பதிகம் பாடியபின்னர்,வீரட்டம் அமர்ந்த அப்பதியின் ஈசன் அருளினாலே நாவுக்கரசென்னும் பெயர் உலகத்தில் "நயப்புற மன்னுக" வென ஆகாயவாணி மொழிந்ததென்றும், அது கேட்ட அப்பர் "சித்தந் திகழ்தீவினையே னுடையுந் திருவோ இது" என்று தெருண்டு "அத்தன்மையனாய விராவணனுக் கருளுங் கருணைத் திறமான வதன் மெய்த்தன்மை யறிந்து துதிப்பதுவே மேல்கொண்டு வணங்கினர் மெய்யுறவே" என்றும் விளக்குகின்றார். அப்பர் தான் சமணரிடையிருந்து செய்த செய்கை, இராவணன் கைலையைப் பேர்த்தெடுக்க முயன்ற தொக்கும் புறச்சமயச் செய்கை யென்றும், அவ்வாறு தான் குற்றஞ் செய்தும் தன்னை அருள்வசமாக்கியது இராவணனுக்கு அருளிய கருணைத் திறத்தை யொக்குமென்பதாம். இதை உற்று நோக்கின் இவ்விரு குற்றங்களுக்கும் அடிப்படையாய் நின்றது ஆணவ மலமேயாம். தான் சமயங்களை ஆராய்ந்து உலக தத்துவப் பொருளை உணரவையென்றும் அதற்குச் சித்தாந்தம் இதுதான் என்றும் சமணத்தில் மருணீக்கியார் துணிந்தது, யானை பிடிக்க ஒருவன் முயல்பிடிக்கும் வலையை எடுத்துச் சென்ற செய்கையை யொக்கும். இக்கருத்தை நம்பியாரூரர் தம் தேவாரத்தில் ஒருவிதத்தில் குறிப்பிட்டுப் பின்வரும் செய்யுளில் விளக்குவது காண்க:—

அயலவர் பரவவு மடியவர் தொழவும்
 அன்பர்கள் சாயலு ளடையலுற் றிருந்தேன்
முயல்பவர் பின்சென்று முயல்வலை யானை
 படுமென மொழிந்தவர் வழிமுழு தெண்ணிப்
புயலினைத் திருவினைப் பொன்னிறத் தொளியை
 மின்னின துருவை யென்னிடைப் பொருளைக்
கயலினஞ் சேலொடு வயல்விளை யாடுங்
 கழுமல வளநகர் கண்டுகொண் டேனே.

சுந்தரர் - திருக்கழுமலம் - பண் - தக்கேசி 7.

முயல்வலையைக்கொண்டு யானையைப் பிடிக்க முயலுவதுபோல் தேகபலமும் அறிவுங்கொண்டு அளக்கலாகாதவொருவனை அளக்கத்துணிவது முயற்சிவகையில் மாத்திரம் நின்றால் அத்துணைப்பழுதில்லை. வெல்வதே கருமமாகி வெம்பகையின் வலிமை கருதாது காரியங்கள் செய்தலே இராவணன் தன்மையாகும். இராவணன் மரித்தும் இராவணத்தன்மை நம்மைவிட்டுநீங்குதலின்றி நிலைத்திருப்பதை யொழிக்க முயல்வது நமது கடனாதலால் அதைச் சம்பந்தரும் அப்பரும் பலவிதங்களாற் சுட்டிக் காட்டுகின்றனர். திருஞானசம்பந்தர் கோளறு திருப்பதிகத்தின் 8-ம் செய்யுளின் கருத்தும் இதுவன்றோ?

வேள்பட விழிசெய் தன்று விடைமே லிருந்து
 மடவாட னோடு முடனாய்
வான்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தெ
 னுளமே புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழிலங்கை யரையன்ற னோடு
 மிடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல யவைநல்ல நல்ல
 வடியா ரவர்க்கு மிகவே.

சம்பந்தர் - கோளறு திருப்பதிகம் 8.

முன்னொருகாலத்தில் மன்மதன்தேவர்களேவலால் பரமனிடம் தன் வில்லை வளைத்து அம்பெய்ய அதனால் சிவபெருமான் கோபத்துடன் நெற்றிக்கண்ணைத் திறந்ததும் சாம்பலானானென்னும் விஷயம் தெரிந்த இராவணன் கயிலையைப் பேர்க்க முயன்றது ஆணவ முதிர்ச்சியன்றோ? காமியத்தின் உருவகம் கெட்டதெனினும், ஆணவத்தின் உருவகம் தலைகாட்டியும் நிற்கும். ஆதலால் இடர்களின் மேலான இடர் "ஏழ்கடல் சூழிலங்கை யரையன்றனோடும் இடர்" (என்பதில் "அரையன்றன்" என்பது "அரையன்றான்" என்

* இராவணன் பல குற்றங்கள் செய்திருப்பினும், அவற்றில் ஒரு குற்றத்தையே சம்பந்தரும் அப்பரும் எடுத்துக் காட்டுவதைக் கவனிக்கவும்.

பதின் குறுக்கலாகக் கொள்ளின் இந்தச்செய்யுளின் பொருள் வெளிப்படை). ஏழ்கடல் யாவையெனின் பாற்கடல் தயிர்க்கடல் முதலிய புராணக்கூற்றுய ஏழ்கடல்அல்ல.பரம்பொருளை யடையவொட்டாது ஒரு சிவனைத் தடைசெய்வன எழுவகையாகிய பெருந் தத்துவ இடையூறுகளென்று விளக்குவதுபோல், புகலி வேந்தர் இக்கோளறு திருப்பதிகத்தின் முதல் ஏழு பாடல்களில் அவற்றை முறையே குறிப்பிட்டு, அவற்றை வெல்லும் வகைகளையும் காட்டினர். அவையாவன:—(1) நவக்கிரகங்கள் (2) இந்நவக்கிரகங்கள் சம்பந்தப்படும் பன்னிரண்டு இராசிகளின் தேகமாகிய இருபத்தேழு நட்சத்திரங்கள் (3) நவக்கிரஹங்கள், இருபத்தேழு நட்சத்திரங்களாலாக்கப்பட்ட பன்னிரண்டுராசிகளுடன் சம்பந்தப்படுவதால் வரும் பலன்களின் அதிகாரதேவதைகளான திருமகள், கலைமகள், செயமகள், பூமகள், அஷ்டதிக்குப்பாலர்கள் (4) இப்பலன்களின் இடையிடையே துன்புறச்செய்யும் கொடுங்காலச் சம்பந்தங்களான அக்கினி, யமன், அவன் தூதர்கள், கொடுக்கும் பலவித நோய்கள், தூர்புத்தி முதலியன (5) பூத பைசாச வேதாளங்கள், இடி மின்னல் முதலிய பஞ்சபூத பிழைகள் (6) சிங்கம், புலி, யானை, நாகம், பன்றி, கரடி முதலிய துஷ்டமிருகங்கள்* (7) தேகத்திலேயே பிறந்து தேகத்தை அழிக்கும் வாதபித்த சிலேத்துமமாகிய நோய்களின் அடிப்படைகள்.

இவ்வேழு துன்பங்களையும் கடக்க வல்லவன் எவனோ அவனே பிறவி சாகர ஏழுகடல்களைக் கடந்தவனாவன். உடலுக்குச் சித்தியும் உயிருக்கு முத்தியும் பெற முயல்வதே ஞான சாதனங்களாம். உடலை நீக்கி உயிர் முத்தி பெறலாமென்பது ஆகாத காரியம். ஆதலால் வைதிகம் லௌகிகம் என்பது வெவ்வேறான துறைகளாய் என்றுமல் லௌகிக நிலையிலேயே வைதிகத்தை வளர்க்க வேண்டும். ஆகவே இவ் வேழுவகைத் துன்பங்கள் அல்லது ஏழு கடல்களைக் கடக்கச் சிவபெருமானை எழுவகை மூர்த்தங்களாய் உபாசிக்க முறையே முதல்ஏழு செய்யுள்களில் திருஞானசம்பந்தர் கோளறு திருப்பதிகங்களில் நமக்குக் காட்டினர். இக்கடல்களை நீத்தும், பின்னரும் உழைப்பிலமைய வேண்டியதா யிருக்கின்றது. கடலைக் கடந்தவுடன் பலவித அரண்களுடன் இலங்கை நிற்கும். இதில் "இறவாமே வரம் பெற்றே னென்று மிக்க இராவணன் இருபதுதோள்" § களுடன் வீற்றிருக்கின்றான்.

"எடுத்த வாளரக் கன்திறல் வண்ணமும்
இடர்கள் போர்பெரி தாகிய வண்ணமும்" †

அங்குக் காணலாம். இத்தகைய பரப்பு நீரிலங்கை அரையன் ஊர்ந்தை யாவரும் அளக்கொணாது வருந்துவர். இவன் இலங்கைமீது இருசுடர் ஓடா. ‡ இவன் வலி பெரிது. அதனாலேயே கைலாயத்தை எடுக்கத் துணிந்தான் §. இவன் நகர், செறிந்த மதில்களார்ந்தது ¶. இத்தகைய அரண் பெற்றவனை ஏழு கடல் கடந்தும் அழிப்பது சுலபமான காரியமன்று. இதைச் சம்பந்தர்,

வலமிகு வாளன வேலன வளைவா ளெயிற்று
மதியா வரக்கன் வலியோ
டுலமிகு தோள்க ளொல்க விரலா லடர்த்த
பெருமா னுகந்த நகர்தான்

* சம்பந்தர் காலத்தில் இவற்றின் துன்பம சொல்லொணாது ஆயினும் இக்காலத்தில் அத்துணை அச்சம் அவை விளைக்கா.

§ திருநள்ளாறு - திருத்தாண்டகம் 10.
† திருவையாறு - திருக்குறுந் தொகை 10.
‡ திருமழப்பாடி - திருத்தாண்டகம் 10.
§ திரு ஆவடுதுறை - திருத்தாண்டகம் 10.
¶ திருவாவடுதுறை - திருத்தாண்டகம் 10.

நிலமிகு கீழுமேலும் நிகராது மில்லை
யென நின்ற நீதி யதனை
நலமிகு தொண்டர் நாளும் அடிபரவல் செய்யு
நனிபள்ளி போலு நமர்காள்!"
—திருநனிப்பள்ளி-பண் - பியந்தைக்காந்தாரம். 8.

என்பதிற் காணலாம்.

இவ்விலங்கையரையன் என உருவகப்படும்ஆணவமலம்சாமானியமாய் நசிக்கொணாதது; மிருபலம்பெற்றுச்சத்துவகுணச் சிறகுகள்பெற்ற சடாயுவைப் பின்னஞ்செய்த வாளும், ஆராய்ச்சி யென்னும் கண்ணைக் குத்தத்தக்க வேலும், உமாதேவியார் அடியவர்க்கருளும் பிராணதாரமான தசைமுதலியனவற்றைக் கிழிக்கத்தக்கஎயிறும்,பாதையும்மதியாதாகிகரத்தாநிற்பது இவ்வாணவமலம். இதையொழிக்கச் சிவபெருமான் திருவடிப்பற்றுச் சிறிது கிடைப்பின் அது போதுமானதாம். கால்விரலிற் சிறிது பாகம் ஊன்றப்பெறின் இவ்விராவணத்தன்மை நசுங்குண்டு,அழிந்தொடுங்கிப் பின்னர் அத்திருவடியின் மாட்சியால் பேருளைப் பெறும்.

ஆதிம மாமலை யன்றெடுத் தானிற்றுச்
சோதி யென்றலுந் தொல்லருள் செய்திடும்
ஆதி யான்மரு கற்பெரு மான்திறம்
ஓதி வாழ்பவ ரும்பர்க்கு மும்பரே
—திருமருகல் - திருக்குறுந்தொகை - 10.

என்றார் திருநாவுக்கரசு. ஆணவ வடிவமான இராவணன் சிவபெருமான் தன் விரலால் சிறிது ஊன்றியதும் அவன் தன்மை மாறியது. சாமவேதகானம் பாடினன்.

வலித்த தோள்வலி வாளரக் கன்றனை
நெருங்க நீள்வரை யூன்றுநெய்த் தானனார்
புரிந்து கைந்நரம் போடிசை பாடலும்
பரிந்த னைப்பணி வார்வினை பாறுமே.
—திருநெய்த்தானம் - திருக்குறுந்தொகை 10.

என்னும் அப்பர் திருவாக்கின் வண்ணம் சிவபெருமான் திருவிரலூன்றிய மகிமையே ஏழு நரம்பின் இசையாய் முடியச் செய்தது. ஆணவம் சாம்பலாகி, பரிசுத்தவடிவாய் விபூதியிலக்கணமாய் நின்றது:—

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவதுநீறு தத்துவ மாவதுநீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவாயான்திரு நீறே.
சம்பந்தர் - திருநீற்றுப் பதிகம் 8.

என்னும் பாசுரத்திலும் இது இரட்டுற மொழிந்திருப்பது காண்க. கோளறு திருப்பதிகத்தில் எழுவகை இடர்கள் நேரக்கூடியன எவ்வெவற்றாலென்று முதல் ஏழுசெய்யுட்களில் புகலிவேந்தர் முறையேகூறி அவற்றின் பரிகாரங்கள் சிவபெருமான் மூர்த்தத்தை இவ்விவ்விதமாக மனதிற் பதிப்பித்து வழிபடுதலென்று விளக்கினர். 8-வது செய்யுளில் "ஏழ்கடல் சூழிலங்கையரையன்றனோடும் இடரான வந்துநலியா" வண்ணமும் "ஆழ்கடல் நல்ல" தாகவும் நிற்க எத்தகைய சிவத்தியானம் உதவுமெனின், காமதகனஞ் செய்த பெருமான் விடைமேலிருக்கும் கோலமாய்ச் சிவகாமியோடும் சந்திரனோடும் வன்னியோடும் கொன்றை மலர் தரித்த மூர்த்தமே. இலங்கையரையனை இராவணன் சம்பந்தருக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் சுற்றத்துடன் மாண்டனனாதலின், அவர் காலத்திலேனும், பின்னிட்ட அடியார் காலத்திலேனும் அவனாலாகிலும் அவன் சுற்றத்தாராலாகிலும் ஒருவருக்குத் துன்பம் எவ்வாறு விளையக்கூடும்? ஆகையால் ஸ்தூலவடிவமாய்ச் சீதையைக் கவர்ந்தகன்ற இராவணனைப் பற்றிச் சம்பந்தர் பாடினரென்னில், அது வெற்றுரை யாகும். ஆகையால் அச் செய்யுளில் சம்பந்தர்காட்டிய ஏழுகடல் எவ்வாறு உருவகமாயிற்றோ அவ்வாறே இராவணனும் உருவகமாம்.

எனவே இராவணன் மேலதாகிய நீறே, 10-ம் செய்யுளில் "புத்தரொ டமணை வாதி லழிவிக்கு மண்ணல் திருநீறு" என்று கொள்ளல் வேண்டும். இதன் செம்மைத் திடமே "அத்தகு நல்ல நல்ல" எனப்பட்டது. இதை மற்றோரிடத்தில்காழியர்கோன் பின்வருமாறு விளக்குகின்றார்:—

உருவரை கின்ற நாளில் உயிர்கொள்ளுங் கூற்றம்
நனியஞ்சு மாத லுறநீர்
மருமலர் தூவி யென்றும் வழிபாடு செய்ம்மின்!
இழிபா டிலாத கடலின்
அருவரை சூழி லங்கை யரையன்றன் வீரம்
அழியத் தடக்கை முடிகள்
திருவிரல் வைத்து கந்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழுவே
சம்பந்தர்—பண் - பியந்தைக் காந்தாரம் 8.

[இதில் "இழிபாடிலாத கடலின் அருவரை சூழிலங்கை" என்னும் தொடர்மொழியைக் கவனிக்கவும்] இழிபாடிலாத கடல்களும் அருவரைகளும் நமது ஆணவத்தைச்சுற்றியதைப்பாதுகாப்பனவாயுள. இத்தகைய வீறிட்ட வாழ்க்கையே நமது நடலைவாழ்க்கையாகும். மனிதனது உழைப்பு ஒன்றே அதை அழிக்கப் போதாது. இராமபிரான் தன் வில்வித்தையும், அஸ்திரங்களையுமே துணையாகக்கொண்டு இராவணனை அழிக்கலாகாதோ? குரங்குளுக்குக் கஷ்டம் சொடாமலே அவர் பாணங்களாலேயே ஓர் பாலங் கட்டலாகாதா? இந்தியாவின் கரையிலிருந்தபடியே அஸ்திரங்களால் சீதையைமீட்டு இராவணுதியரை அழிக்கலாகாதா? செய்யச்சக்தியிருந்தும் செய்யமுடியாமையாலேயே அநுமானதியாரைத் துணைகொண்டு செல்லலானார் - உருவகத்தில் இராமனையும் இராவணனையும் உற்று நோக்கின் "நிலமிகு கீழுமேலும் நிகராது மில்லையென நின்ற நீதியதனை" நன்கு உணரலாகும்.

இராவணனைக் கயிலாய மலையின் கீழ் அடர்த்து அவன் கீதங்கேட்டுப் பின்னர் வாளும் வரமும் சிவபெருமான் தந்தது உலகத்தில் கொடுமை செய்வதற்கன்று. அவன் நடலைவாழ்வைக்களைந்தருக்கவேண்டுமென்று எண்ணியதுபோல் வாளிந்தனர். இதற்குப் பின்னர் இவனது வரலாற்றில் கொடிய காரியங்கள் செய்ததாகக் காணப்படவில்லை. சிவபக்தனாகப் பல காலம் வாழ்ந்ததாகவும் காணப்படுகின்றது. ஆகையால் சிவபெருமான் இராவணனைப் புனிதனுக்கவேயெண்ணி வரந் தந்தாரே யன்றி வேறு கருத்தாய்ச் சற்பாத்திரமல்லாதானுக்கு மேன்மை தரவெண்ணியதாய்க் கூறலாகாது-இவர் திருவுள்ளம் விளங்குமாறு திருஞான சம்பந்தர் திருப்பாசுரமொன்றை இச்சந்தர்ப்பத்தில் நாம் நோக்குவோம்:—

அடலெரு தேறு கந்த அதிருங் கழல்கள்
எதிருஞ் சிலம்பொ டிசையக்
கடலிடை நஞ்சமுண்டு கனிவுற்ற கண்டன்
முனிவுற் றிலங்கை யரையன்
உடலொடு தோளனைத்து முடிபத் திறுத்தும்
இசைகேட் டிரங்கி யொருவாள்
நடலைகள் தீர்த்துநல்கி நமையாள வல்ல
நறையூரி னம்ப னவனே.
—சம்பந்தர் - திருநறையூர்ச் சித்தீச்சரம் 8.

சிவபெருமான் இராவணனுக்கு அருள்புரிந்த பின்னர்த் தேவர்களுக்கும் மனிதர்களுக்குமவன் பெரும் பகையாய்க் கொடிய துன்பங்கள்செய்து நின்றானென்பது இராமாயணநோக்கு. மற்றும் அதுவே கொடிய வொளியில் கம்பராமாயணத்தில் காட்டப்பட்டது. ஆயினும் "உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம், நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கேநின்றான்," கட்சியில் ஒரு தரத்தானுப் நிற்பவனல்லன். ஆகையால் "அரக்கனுக்கும் அருளும்வைத்தார்." அவ்வருள்பெற்ற பின்னர் அவன் இனத்தாருக்குயாதொருதீங்கும் இழைத்தானில்லை. அவனால் அரக்கர்நிலைமை உயர்ந்தது. பரதக்கண்டமுழுதும் எல்லாவரசர்களும் அரக்கரைக்கொன்றொழிக்க வஞ்சினர். இராவணன் அரக்கர்களுக்கு யாதுங் கொடிதுசெய்திலன். மனிதர்களுக்குத் தீங்கு செய்யாது நன்மைபுரிந்து ஏனைய விலங்களுக்குத்துன்பஞ்செய்யும் மனிதனை நல்லவனென்று நம்முலகம் எவ்வாறு கூறுமோ, அவ்வாறே அரக்கவுலகில் நன்மைபுரிந்தோன், மனிதர்களுக்குத் தீங்கிழைப்பினும், அவ்வரக்கவுலக நிலையில் அவனைச் சன்மார்க்கனென்றே கொள்ளல்வேண்டும் மனிதர்களுக்குத் தீங்கிழைத்ததால், அவனைப் பெருங் குற்றவாளியெனில், உலகத்திலுள்ள சீவராசிகள் எவற்றினுக்கும் பகையான நமது மனிதக்கூட்டம் அரக்கர் கூட்டத்திற்கு எவ்வாறு மேம்பட்டது? இராவணனைக் கண்டிக்கும் கண்ணுடன் நமதுசெய்கைகளையும் நாம்நோக்குவோமாயின், இராவணனைக் காட்டிலும் பெரும் பாதர்களாய் நாம் திகழ்கின்றோ மன்றோ?

ஆகையால் இராவணனுக்குச் சிவபெருமான் அநுக்கிரகம் செய்தது கடவுட்டன்மையாகிய பொறுத்தன்மையில் மேலான கருணையே யாகும். அவ்வாறு அருள் பெருக்கச்செய்து உலகத்திற்கு அதை விளங்கச் செய்த இப் பெருந்தன்மையை ஆராய்ச்சியில் ஆய்ந்தறிய வேண்டியது மனிதராய்ப் பிறந்த பிறவியின் பெருஞ் செய்கையாம். இன்றேல் யாம் சுயவர்கனத்தில் சேரவேண்டியர்களாவோம். இதை அப்பர் 5-ம் திருமுறையின் இறுதிச் செய்யுளால் விளக்கலாம்.

அரககன் வல்லரட் டாங்கொழித் தாருள்
பெருக்கச் செய்த பிரான்பெருந் தன்மையை
அருத்தி செய்தறி யப்பெறு கின்றிலர்
கருத்தி லாக்கய வக்கணத் தோர்களே
—ஆதிபுராணத் திருக்குறுந்தொகை 10.

இராமன் சரிதை முற்றிற்று.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஜீவமஞ்ஜரடைன்" (டானிக்). "பாலாமிஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
கோரோஜனை மாத்திரை
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

199187

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

புத்தக வரவு:—கீழ்க்கண்ட புத்தகங்கள் எம்முடைய பார்வைக்கு வரப் பெற்ளும்.

பனத சங்கரி அல்லது மோட்டைக் கோபுரத்தில் இரட்டைக் கோலை:—. இது ஓர் துப்பறியும் கற்பித நவீனம். G. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இயற்றியது. இதனைப் பிரசுரம் செய்தவர், ஜீவகாருண்ய சங்கத்தார். கோம்பை, மதுரை ஜில்லா. விலை ரூ 1.

மங்கைக்கோர் மதியுரை:—இது மாதர்க்குரிய புத்திமதியைப் போதிக்கின்ற ஒரு சிறு நூல். திரு. தா. பொ. மாசிலாமணிப்பிள்ளை அவர்கள் எழுதியது. தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம், வண்ணார்பண்ணை, இலங்கை என்னும் விலாசத்திற் கிடைக்கும்.

கிராதார்ச் சுனீயம்:—வட மொழில் 'பாரவி' என்னுங் கவி எழுதிய இப்பெயருடைய நூலை முதனூலாகக் கொண்டு, யாழ்ப்பாணம்—மத்திய கல்லூரி வியாஹரணமஹோபாத்தியாயர்பிரமஸ்ரீ வை. இராமசாமிசர்மா அவர்கள் எழுதியது. வேடனுப் பன்றியைத் தொடர்ந்துவந்த சிவபிரானுடன் போர்செய்து அர்ச்சுனன் அத்திரம்பெற்ற செய்தி இந்நூலின்விடயமாம். இதுவும், மேல் கண்ட தனலக்குமி புத்தகசாலையிற் கிடைக்கும்.

* * *

மயில் கத்தினுல் சுமார் ஒரு மைல் தூரம் கேட்குமெனக் கூறுகிறுர்கள்.

வேகமாகப் பறக்கக்கூடிய கழுகுகள் மணிக்கு 120 மைல் பறக்கக் கூடுமெனக் கணக்கெடுத்திருக்கிறுர்கள்.

பெருங் கூச்சல் புறு:—பிரேஜில் காடுகளில் ஒரு விதமான பறவைகள் இருக்கின்றன. இவை புறுக்களைப்போல்வெண்மை நிறமுள்ளவை. இந்தப்பறவை ஒன்று தலையை நிமிர்த்திக்கொண்டு கத்தினுல் அதன் சப்தம் இரண்டு மூன்று மைல் தூரத்திற்குக் கேட்கிறது. இதைப்போல் இரைச்சல்மிகுந்த பறவை உலகிலேயே கிடையாதென்று கூறுகிறுர்கள்.

அமெரிக்கக் காடுகளில் புறு இனத்தைச் சார்ந்த ஒரு வித பறவைகள் இருக்கின்றன. இவைகள் புறுவின் அளவே இருந்தபோதிலும் அதிகக் கூச்சல் போடுவது இயல்பு. ஒரு பறவை கத்தினுல் 10மோட்டார்கள் ஹார்ன் ஊதியபோதிலும் அதன் சப்தத்தைத் தோற்கடிக்க முடியாதெனக் கூறுகிறுர்கள்.

மூன்று வயதில் மீசை தாடி:—வங்காளம் தினுஜ்பூர் ஜில்லாவில் பாலஸ்பரி கிராமத்தில் அகமதுஎன்ற முஸ்லிம் சிறுவனுக்கு மூன்று வயதிலேயே மீசையும் தாடியும் தோன்றினவாம். இப்பொழுது பத்து வயதில் அவன் மீசையும் தாடியும் நீளமாக வளர்ந்திருக்கின்றனவாம்.

91-ல் வேலை:–அமெரிக்காவில் ஓர்செஸ்டர் வாசியான 91-வயது சென்ற சேத் லிங்கன் என்பவர் ஒரு அச்சுக்கூடத்தில் (கம்பாசிட்டர்) எழுத்துச் சேர்க்கும் வேலை செய்து வருகின்ருராம். அவர் மிதமான உணவு உட்கொள்கிறவர். மதுபானம் கிடையாது. புகைக்குடி யற்றவர். அதனுல்தான் அவர் தொண்ணூறிலும் இளமையோ டிருக்கிருராம்.

கண்ணுடிப் பாதரட்சை:—சமீபத்தில் கண்ணுடியாற் செய்த பாதரட்சைகள் லண்டனுக்குக் கொண்டு வரப் பெற்றன. அவைகள் கண்ணுடி நூற்களைக் கொண்டு செய்தனவாக இருந்தன.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.

ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஞு ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னுல் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 50வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனும்! இனும்!!
"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"
இனுமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)